# உன்னத தாரத்திற்கான நிலையம்

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ
நிறுவனத்திற்கு வரவேற்கின்றோம்

# தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

# ஆண்டறிக்கை 2014

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்
எம். டி. எச் ஜயவர்த்தன மாவத்தை
அத்துருகிரிய

தொ. பே: 011-2770232 – தொலைநகல். : 0112798775
மின்னஞ்சல்: nipm@sltnet.lk/nipd@sltnet.lk
இணையத்தளம் :www.nipm.gov.lk

**உள்ளடக்கம்**


| | பக்க இல. |
|---|---|
| நோக்கும், பணியும் | 3 |
| தவிசாளரின் செய்தி | 4 |
| பணிப்பாளரின் / பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 5 |
| குறிக்கோள்கள் | 7 |
| சபை ஆளுநர்கள் உள்ளடக்கம் | 8 |
| சபை ஆளுநர்களின் கூட்டங்கள் | 10 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் | 11 |
| நிறுவனத்தின் பதவியினர் -2014 | 12 |
| நிறுவனக் கட்டமைப்பு | 14 |
| பயிற்சிப் பிரிவு | 15 |
| பயிற்சி செயற்பாடுகள் -2014 | 16 |
| பெருந்தோட்டத் துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 |
| சிறு உடமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 20 |
| பயிற்சி முறையியல் | 22 |
| பெருந்தோட்ட முகமைத்துவத்தில் விஞ்ஞானமானிப் பட்டம் | 24 |
| ஆலோசனைச் சேவைகள் | 25 |
| நூலக வசதிகள் | 26 |
| நிறுவனத்தின் தொழில்சார் அங்கத்துவம் | 27 |
| வெளியீடுகள் | 27 |
| வளாகத்தினுள் கிடைக்கப்பெறும் வசதிகள் | 28 |
| 2015 ஆம் ஆண்டுக்கான தகவல் தொகுப்பேடு | 29 |
| பயிற்சி செயற்பாடுகளன் புதிய பரிமானங்கள் | 30 |
| நிருவாகப் பிரிவு | 30 |
| நிதிப் பிரிவு | 31 |
| நிதியியல் மற்றும் பௌதீக செயலாற்றுகை | 32 |
| முன்னைய ஆண்டடிற்கெதிரான முன்னேற்றம் | 36 |
| நிறுவனத்தினால் எதிர்கொள்ளப்பட்ட தடைகள் | 37 |
| முடிவுரை | 38 |

# நோக்கு

பெருந்தோட்ட முகாமைத்துவப் பயிற்சி வழங்குதலிலும் உசாத்துணைவு வழங்குவதிலும் ஆராய்ச்சி நடாத்துவதிலும் அதிசிறந்த நிலையமாக திகழ்தல்

# பணி

தரம்வாய்ந்த பயிற்சி ஊடாக முழுநிறைவினை நோக்கி பெருந்தோட்டக் கைதொழிலில் காணப்படும் அனைத்து மானிடச் சொத்துக்களினதும் தொழில்சார் ஆற்றலினை அதிகரித்தல்

## தவிசாளரின் செய்தி

2014 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கையை எடுத்துரைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.
மிகவும் அவசியமான சேவையினை இனங்கண்டு முன்னைய ஆண்டினைப் போல் இவ்வாண்டின் போதும் நாம் பெருந்தோட்ட ஆளணிக்கு தேவையான வழங்கப்பட்டிருக்காத எமது சேவைகளை வழங்குவதற்கு கற்கைநெறிகளை வழங்கினோம். அதாவது, மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின் போது தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியன பிரதான பங்குகளில் 70% இற்கு மேல் உள்ளடக்குகின்ற எமது பயிர்ச் செய்கையாளர்களுக்கு வருடம் முழுவதும் இவ்வகுப்பினருக்கு 355 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினோம். கரும்பு மற்றும் மரமுந்திரிகை போன்ற ஏனைய பெருந்தோட்ட பயிர் உற்பத்தியாளர்களையும் நாம் உள்ளடக்கியிருந்தோம்.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 இன் போது நடாத்தப்பட்ட மொத்த நிகழ்ச்சித்திட்டங்கள் 50% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

வெளிப்பயிர்ச்செய்கையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க திறைசேரி அளிப்பினைப் பயன்படுத்தி ரூபா. 9.98 மில்லியன் செலவில் 25,100 ஆட்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

எமது சேவைகளை தொடர்ந்தும் பயன்படுத்தி எமது அக்கறைதாரர்களுக்கும் எமது தொழிற்பாடுகளை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கு பல்வேறு வழிகளிலும் எமக்கு துணைபுரிந்த ஏனையோருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிறுவனத்தை மிகவும் செயல்திறன் மிக்கதாக்குவதற்கு எமக்கு ஆதரவினையும் வழிகாட்டலினையும் மற்றும் உதவியினையும் வழங்கிய கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர், அமைச்சிலுள்ள ஏனைய அலுவலர்கள் மற்றும் அமைச்சினுள்ள ஏனைய நிறுவனங்கள், நிறுவனத்தின் ஆளுநர் சபையின் அங்கத்தவர்கள் ஆகியோருக்கு முகாமைத்துவத்தினை இலகுவாக்குவதற்காக அவர்கள் அளித்த உதவிக்கு நான் கட்டாயம் நன்றி கூறுதல் வேண்டும்.

எமக்கு சிறப்பாக சேவையளிக்கின்ற, இவ்வாண்டின்போது எமது அனைத்து சாதனைகளையும் சாதகமாக்கிய நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் வழங்கிய சேவைக்கு நன்றி கூறி பாராட்டுகின்றேன். பெருந்தோட்டத் துறையில் பயிற்சியளிப்பதற்கான உன்னத நிலையமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் இலங்கையில் அனைத்து உள்ளங்களிலும் எண்ணங்களிலும் நிலைத்திருக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

**தீப்தி அசோக அபேவிக்ரம**

**தவிசாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

**பணிப்பாளரின்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் மனித வளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும். 1979 இல் தாபிக்கப்பட்டதிலிருந்து கட்டயாமாகக் காணப்படுகின்ற பெருந்தோட்டத் துறையில் உள்ள ஆளணியினரின் தகைமையினை அதிகரிக்கின்ற அதேவேளை அதுருகிரியவில் உள்ள அதன் தலைமையகத்திலும் பொகவன்தலாவையிலுள்ள பிராந்திய நிறுவனத்திலும் வசதியினை ஏற்படுத்துவதற்காக வளங்களையும் வசதிகளையும் ஒன்றுதிரட்டியுள்ளது.

அங்கீகாரமளிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பெருந்தோட்டத் துறைக்காக மாத்திரம் அன்றி தமது தொழில்சார் திறன்களையும் அறிவுத்தளத்தையும் தரம்உயர்த்துவதற்கு விரும்புகின்ற ஏதேனும் வேறு நிறுவனங்களுக்காகவும் கேள்வி உள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக கல்விசார், தொழில்சார், திறன் அபிவிருத்தி, முகாமைத்துவ அபிவிருத்தி போன்ற கற்கைநெறிகளை நடாத்துவதற்கு பொறுப்புடையதாக காணப்படுகின்றது.

2011 வரை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பிரதானமாக அரசாங்கத்திற்கு உரித்தான தோட்டத்துறை ஆளணியினர் மற்றும் பிராந்திய தோட்டக் கம்பனிகளின் ஊழியர்களை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வந்தது. பெருந்தோட்ட பயிர் உற்பத்திகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரிய கூறு சிறுஉடைமையாளர்களின் கைக்கு மாற்றப்பட்டதுடன் நிறுவனமானது அராசாங்க பணிப்புரைகள் மற்றும் நிதியளித்தலின் ஆதரவின் கீழ் சிறு உடைமையாளர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் மற்றும் உற்பத்தி மேம்படுத்தல் அத்துடன் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக நடாத்தி வந்தது.

2011 இலிருந்து தொடர்ச்சியாக 4 வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றமானது சிறு உடைமையாளர்களுக்கான 355 கொள்ளளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கல்விசார், தொழில்சார் மற்றும் திறன் அபிவிருத்தி என்பன மீது வருமானம் ஈட்டுவதுடன் தொடர்புடைய 35 நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 இல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எய்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக தனது தகைமை பெற்ற வள ஆளணியினருடன் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது, அரசாங்கத் திணைக்களின் அல்லது வேறு நிறுவனங்களின் ஊழியர்களை தெரிவு செய்வதற்கு அல்லது பதவி உயர்த்துவதற்கு 11 பரீட்சைகளையும் நடாத்துவதற்கு இயலுமாக இருந்தது.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் அதுருகிரிய மற்றும் பொகவந்தலாவ நிலையங்களில் உட்கட்டமைப்பு தற்காலிகமாக கிடைக்கத்தக்க விரிவுரை மண்டபங்கள், கேட்போர் கூடம், விடுதி, தங்குமிட வசதிகள் மற்றும் வள ஆளணியினர் என்பன உச்ச பயன்பாட்டின் பொருட்டு நிறுவனசார் நிகழ்ச்சித்திட்டங்களில் சலுகை விலைகளில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்கு வழங்கப்பட்டன. 2014 இல் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 100 இற்கும் மேற்பட்ட வெளி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அத்தகைய வசதிகளை வழங்கி ரூபா. 14.04 மில்லியன் தொகையினை ஈட்டியது.

எவ்வாறாயினும், பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை அடைவதற்கு சீரான மற்றும் அவசியமிக்க தொழிற்பாட்டினை நிச்சயமாக பாதிக்கக்கூடிய சில சவால்களை நிறுவனம் இன்னும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நிறுவனத்திலும் வெளியிலும் கட்டாய முகாமைத்துவ கற்கை நெறிகளை நடாத்துவதற்கு அவசியமாகக் காணப்படுகின்ற 13 பதவியணி வெற்றிடங்கள் இனங்காணப்பட்ட குறைபாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றன.

பெருந்தோட்ட பயிர் முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகவும் துறையின் மிக முக்கிய ஏனைய பரப்புக்களுக்காகவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகொன்று கிடைக்கப்பெறவில்லை. அமைச்சின் பணிப்புரைகள் மற்றும் நிருவாக ஒருங்கிணைத்தலுக்கு அமைய எதிர்காலத்தில் இவ்விரு குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் பணிப்பாளராக / பிரதம நிறைவேற்று அலுவலராக நான் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அலுவலர்களுக்கு நிறுவத்தினை அபிவிருத்தி செய்வதற்கான அவர்களது வழிகாட்டல்களுக்கும், வழங்கப்பட்ட ஆதரவுக்கும் நன்றி கூறுகின்றேன்.

தமது பங்களிப்பினை மேற்கொண்டமைக்காக நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கும் அக்கறைதாரர்களுக்கும் இதனுடன் இணையப் பெற்ற பொதுமக்களுக்கும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

2014 ஆம் ஆண்டு ஒரு வெற்றிமிக்க ஆண்டாகும். பெருந்தோட்ட முகாமைத்துவத் துறையில் ‘‘உன்னதத்திற்கான நிலையம” ஆக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினை ஆக்குவதற்கு அயராது பங்களித்த நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களையும் மிகவும் பாராட்டுகின்றேன்.

**கலாநிதி நிஸ்ஸங்க இத்தகொட**
**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**

# தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

# 2014 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிருவாக அறிக்கை

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினை மிகவும் செயல்திறன்மிக்கதாகவும் அரசாங்கத்தின் உறுதியான நியதிச் சட்ட நிறுவனமாக ஆக்கும் பொருட்டும் 1979 இல் 45ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டம் 1981 இல் 76ஆம் இலக்க சட்டம், 1987 இன் 5ஆம் இலக்க சட்டம் மற்றும் 2003 இல் 38ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டது. இச்சட்டங்களுக்கு அமைவாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 3 பிரதான வகுதிகளின் கீழ் வெற்றிகரமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விசார் கற்கைநெறிகளை நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் பெருந்தோட்ட நிறைவேற்று தகைமையுடை அலுவலர்களுக்கு தொழில்சார் உரிப்புரிமையினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சிறு உடைமையாளர் துறை உள்ளடங்கலாக பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்றவர்களின் தொழில்சார் தகைமைகளின் உயர் தரநியமத்தினை பேணுவதனை இது உறுதி செய்கின்றது. இக்குறிக்கோள்களை அடைவதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமனாது பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள், பரீட்சைகளை நடாத்துவதுடன் அரசாங்க, தனியார் நிறுவனங்களுக்கும் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. வெளிநாட்டு மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான கொள்ளளவினையும் இது கொண்டுள்ளது.



**<u>1.0 குறிக்கோள்கள்</u>**

1. இலங்கையிலும் வெளிநாட்டிலும் சுயமாகவும், வேறு நிறுவனங்களின் கூட்டிணைப்புடனும் பெருந்தோட்டத்துறையில் பணியாற்றுகின்ற அனைத்து வகையான ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வேண்டப்பட்ட பயிற்சிகளை வழங்குதல்.

2. பெருந்தோட்டத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் கிரமமான, புத்துணர்வளிக்கும் மற்றும் சேவையில் பயிற்சி கற்கை நெறிகளை வழங்குதல்.

3. பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்ற ஆளணியினருக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விசேட கற்கை பயிற்சி நெறிகளை வழங்குதல்.

4. தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு போன்ற பயிர் ஆராய்ச்சி நிறுவனங்களின் இணைப்புடன் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல்.

5. பெருந்தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் சமவாயங்களுக்க அனுசரணை வழங்குதலும் நடாத்துதலும்.

6. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட சஞ்சிகைகள் மற்றும் கையேடுகளை வெளியிடுதல்.

7. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர்கள் உறவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை மேற்கொள்ளல்.

8. பெருந்தோட்டக் கைத்தொழிலில் அனுகூலமிக்கவாறு அவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படலாம் என்பதை இனங்கண்டு பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கு அவசியமான நுண்ணறிவினைக் கொண்டுள்ளவர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பயிற்சி நெறிகளை வழங்குதல்.

9. அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது பெருந்தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியில் காணப்படும் வேறு நிறுவனங்கள் போன்றவற்றுக்கு முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிருவாக ஆலோசனை அத்துடன் சேவைகளை வழங்குதல்.

10. பல்வேறு உறுப்புரிமை தரங்களின் அனுமதிக்காக அபேட்சகர்களின் தகைமைகளை மதிப்பிடுதல், நிறுவனத்தின் உரிப்புரிமையின் அனைத்து தரங்களுக்காகவும் தகைமை பெறும் பரீட்சைகளை நடாத்துதல் அல்லது வழங்குதல் அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்காக கற்கை நெறிகளை ஊக்குவித்தல், வழங்குதல் அல்லது அனுமதியளித்தல்.

11. அதன் உறுப்பினர்களுக்கு தொழில்சார் செயற்பாடுகளிலும், பொதுவான நடத்தையிலும் உயர் தரம் நியமங்களை பேணுவதை உறுதி செய்தல்.

12. பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதலீட்டினை ஊக்குவித்தல்.

13. பெருந்தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகளை சேமிப்பதும் பரப்புவதனையும் பொறுப்பேற்றல். அத்துடன் வாய்ப்பான பெருந்தோட்டங்களின் அபிவிருத்தியினை உறுதிசெய்வதற்கான ஆராய்ச்சியினை நடாத்துதல்.

14. பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பொருத்தமான கொள்கைகள் மீது அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல். ஏனைய தொடர்புடைய முகவர் நிலையங்களுடன் ஒருங்கிணைத்தல்.

## 1.1. <u>ஆளுநர் சபையின் உள்ளடக்கம்</u>

1981 இன் 76, 1987 இன் 05, 2003 இன் 38ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறு 1979 இல் 45ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தின் பிரிவு 06 இன் நியதிகளுக்கு அமைய இவ்வாண்டின்போதான ஆளுநர் சபை பின்வரும் ஆளணியினரை உள்ளடக்கியிருந்தது.

| பெயர் | உறுப்புரிமையின் வகை |
|---|---|
| திரு. ரன்ஜித் சமரசிங்க<br>முன்னாள் தலைவர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | தலைவர் (2014 ஆகஸ்ட் வரை) |
| திரு. எஸ்.பி. ஹிடெல்லாரச்சி | தலைவர்<br>(2014 செப்டெம்பர் முதல் 2014 நவம்பர் வரை) |
| கலாநிதி. டப்ளியு.எம்.ஜி. செனவிரத்ன<br>பணிப்பாளர்<br>இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் (பதவிவழி உறுப்பினர்) |
| கலாநிதி ஐ.எஸ்.பி. அபேசிங்க<br>பணிப்பாளர்<br>தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் (பதவிவழி உறுப்பினர்) |
| கலாநிதி. ஜயந்த குணதிலக்க<br>பணிப்பாளர்<br>தெங்கி ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் (பதவிவழி உறுப்பினர்) |
| கலாநிதி. டி.வி. சீவரட்னம்<br>பிரதிநிதி/ இலங்கை பயிர்ச்செய்கையாளர் அமைப்பு | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திருமதி. ஈ.ஏ. இரத்தின எதிரிசிங்க<br>பணிப்பாளர் (திட்டமிடல்)/ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. அர்ஜ ̃ன் தெரனியகல<br>பிரதிநிதி/ தெங்கு வளர்ப்போரின் சங்கம் | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திருமதி. ஜே.பி.ஏ. நிரோஷனி<br>உதவிச் செயலாளர்/ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. ரன்ஜன் வல்பொல<br>பிரதிநிதி/ இலங்கை தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. தமயந்தி விஜேசிங்க<br>மூத்த. உதவிச் செயலாளர்<br>நிதி திட்டமிடல் அமைச்சு | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. கே.ஜி.பி. ஒபேசேகர<br>பொது முகாமையாளர்<br>தேயிலை சிறுஉடைமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. மாலின் குணதிலக்க<br>செயலாளர் நாயகம்<br>இலங்கை பயிர்ச்செய்கையாளர்கள் அமைப்பு | மேற்பார்வை உறுப்பினர் |

| | |
|---|---|
| திரு. சரத் சிறிசேன<br>பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி<br>லங்கா கொமடிடி புரோக்கர்ஸ் லிமிடட் | மேற்பார்வை உறுப்பினர் |
| திரு. எம்.பி. சிரில்<br>பதில் பொது முகாமையாளர்<br>தேயிலை சிறுஉடைமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |
| திரு. ஆர்.எம். குணசேகர<br>பிரதிநிதி/ SLFTSHDS | மேற்பார்வை உறுப்பினர் |
| திரு. டி.எல்.எஸ்.ஏ. ஜயசிங்க<br>தலைவர்/ துரசவிய | மேற்பார்வை உறுப்பினர் |
| திரு. ராஜா பிரேமதாச<br>பணிப்பாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | உறுப்பினர் (பதவிவழி உறுப்பினர்) |
| திரு. ஜி.டி.டப்ளியு. ஜயவர்தன<br>பதில் பணிப்பாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | உறுப்பினர் (நியமிக்கப்பட்ட) |

## 1.2 ஆளுநர் சபையின் கூட்டங்கள்

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின்போது தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் அதுருகிரிய என்ற இடத்தில் ஆளுநர் சபையின் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இக்கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

1. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் செயல்திட்டம் தயாரித்தல்
2. கற்கைநெறி கட்டண வருமதிகள் மற்றும் அவற்றை அறவிடும் முறைகள் அத்துடன் நியாயமான காரணங்களின் கீழ் அறவிடப்படாதவற்றை கடன் பதிவழிப்புச் செய்தல்.
3. நிறுவனத்தின் பயிற்சிச் செயற்பாடுகளும் கணக்கு மற்றும் நிருவாகப் பிரிவுகளுடன் தொடர்புபட்ட ஏனைய கருமங்களும்
4. நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் குறுகிய கால நீண்டகால அத்துடன் வெளிநாட்டு புலமைப் பரிசில்கள்
5. ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாட்டு முன்னேற்றம்
6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கருமங்கள்

7. தற்போதைய ஆண்டுடன் தொடர்புடைய நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கண்காய்வு வினவல்களுக்கான பதில்கள்

8. புதிய ஆட்சேர்ப்பும் பதவி உயர்த்தல்களும்

9. நிறுவனத் திட்டம், செயல்திட்டம் என்பவற்றை சமகாலப் படுத்தல்.

10. அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்

11. முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய நிருவாக அறிக்கை, நிதி அறிக்கைகள்

12. நிறுவனத்தின் பணியின் தரத்தினையும் செயலாற்றுகையினையும் மேம்படுத்துவதற்கான மூலோபாயங்கள்

13. கொள்வனவுக் கருமங்கள்

## 2.0 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் (AMC)

நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது நிதியமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளதுடன் பின்வருவனவற்றை மேற்பார்வை செய்வதற்காக சபையினால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

- நிதி அறிக்கையிடல்
- உள்ளக கட்டுப்பாடு
- கணக்காய்வு வினவல்கள் கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்புபட்ட கருமங்கள்
- பெறுகைக் குழுவின் தீர்மானங்கள் மற்றும் மூலதன, மீண்டெழும் ஏற்பாடு பயன்பாடு
- வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளும் உண்மையான செயலாற்றுகை முன்னேற்றமும்
- மேலதிக நேரம், எரிபொருள், தொலைபேசி மற்றும் மின்சாரம் போன்றவற்றின் செலவினத்தினை வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீட்டுடன் ஒப்பிடுதல்
- பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் மீது ஏற்பட்ட செலவினம்
- நிறுவனத்துடன் தொடர்புபட்ட ஏனைய நிதியியல் செயற்பாடுகள்

**உறுப்புரிமை**

பின்வரும் நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் நிதியமைச்சின் பிரதிநிதியால் தலைமை வகிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவாக பணியாற்றினர். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளராக நிறுவனத்தின் கணக்காளர் செயற்பட்டார். மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின்போது நான்கு கூட்டங்கள் இடம்பெற்றதுடன் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

| | |
|---|---|
| திருமதி. தமயந்தி விஜேசிங்க<br>சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு | தலைவி |
| கலாநிதி. ஜனதா குணதிலக<br>பணிப்பாளர்/தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் |
| திருமதி ரட்னா எதிரிசிங்க<br>பணிப்பாளர் - திட்டமிடல்<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | உறுப்பினர் |
| திரு. டப்.ஏ.டி.டி.எம். பிரியந்த<br>உள்ளக கணக்காய்வாளர்/ பெகைஅ | அவதானிப்பு<br>உறுப்பினர் |
| திருமதி. லலனி குணதிலக<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்<br>திணைக்களம் | அவதானிப்பு<br>உறுப்பினர் |
| திரு. எல்.டி.ஜே. பிரியந்த<br>கணக்காளர்/தேபெமுநி | செயலாளர்/<br>கமுகு |

## 3.0 **2014 ஆம் ஆண்டின் போதான நிறுவனத்தின் பதவியினர்**

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் நிரந்தர ஊழியர்களாக மொத்தமாக 46 பேரைக் கொண்ட வேலைப்படை காணப்பட்டது. எமது அர்ப்பணிப்புமிக்க உத்வேகமுடைய வேலைப்படை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பு காரணியொன்றாக அமைந்திருந்தது.

| | | **எண்.** |
|---|---|---|
| 3.1.1 | தலைவர் | 01 |
| | பணிப்பாளர் | 01 |

3.1.2 **பயிற்சிப் பிரிவு**

| | |
|---|---|
| பயிற்சி விசேட நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி விசேட நிபுணர் (முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி விசேட நிபுணர் (விவசாயப் பொருளியில்) | 01 |
| பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி அலுவலர் (விவசாயப் பொருளியல்) | 01 |
| பதிவியினர் உதவியாளர் (பயிற்சி) | 01 |
| நூலகர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் i) | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் ii) | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் iii) | 02 |
| அலுவலக உதவியாளர் | 02 |

### 3.1.3 <u>நிருவாகப் பிரிவு</u>

| | |
|---|---|
| பதில் உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | 01 |
| விடுதி முகாமையாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் i) | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் ii) | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் iii) | 03 |
| சாரதி | 06 |
| தோட்ட உதவியாளர் | 04 |
| அலுவலக உதவியாளர் | 03 |
| விடுதி உதவியாளர் | 03 |

### 3.1.4 <u>நிதிப் பிரிவு</u>

| | |
|---|---|
| கணக்காளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் i) | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் ii) | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் (தரம் iii) | 02 |
| அலுவலக உதவியாளர் | 01 |

## *3.2 சிரேஷ்ட முகாமைத்துவம்*

| | |
|---|---|
| திரு. ரன்ஜித் குமார சமரசிங்க | தலைவர் (2014 ஓகஸ்ட் வரை) |
| திரு. எஸ்.பி. ஹிடலாரச்சி | தலைவர் (2014 செப்டெம்பர் 14 முதல் நவம்பர் வரை) |
| திரு. ஜி.டி.டப். ஜயவர்தன | பதில் பணிப்பாளர் (ஜ¨ன் வரை) |
| திரு. ராஜா பிரேமதாச | பணிப்பாளர்(ஜ¨ன் முதல் டிசம்பர் வரை) |
| திரு. பி.எச். ஜயதிலக | பயிற்சி விசேட நிபுணர்( கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) |
| திரு. எல்.டி.ஜே. பிரியந்த | கணக்காளர் |
| திருமதி. எஸ்.என். இளங்கன்தில்லகே | பயிற்சி விசேட நிபுணர் (விவசாயப் பொருளியல்) |
| திருமதி. ஆர்.என். லொகுஹெட்டி | பயிற்சி விசேட நிபுணர் (முகாமைத்துவம்) |

நிறுவனக் கட்டமைப்பு 14ஆம் பக்கத்தில் கீழே தரப்பட்டுள்ளது.

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**நிறுவனசார் கட்டமைப்பு**




- நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

TS- பயிற்சி நிபுணர் MA-முகாமைத்துவ உதவியாளர் Mgt-முகாமைத்துவம் Tech-தொழில்நுட்ப PO-நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (பரீட்சை மற்றும் ஒருங்கிணைத்தல்

TO-பயிற்சி அலுவலர் A & FM-கணக்கீடும் நிதியியல் முகாமைத்துவமும் AVA-இருவட்டு ஒளிப்பேழைஉதவியாளர் AE-விவசாயப் பொறியியல் PRO.ASST-பெறுகை உதவியாளர்

### 4.0 பயிற்சிப் பிரிவு

1979 இன் 45ஆம் சட்டத்திற்கும் சொல்லப்பட்ட சட்டத்திற்கு அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாகவும் நிறுவனத்தின் பிரதான குறிக்கோளானது சிறு உடைமையாளர்கள் உட்பட பெருந்தோட்டத்துறை ஆளணியினருக்கு பயிற்சி மற்றும் கற்றல் வாய்ப்புகளை வழங்குவதாகும். தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, எண்ணெய் பாம், பனை, மரமுந்திரிகை, கிதுள், மற்றும் கருவா போன்றவற்றை நீடித்து வாழும் பயிர்களாக பெருந்தோட்டத்துறையினை வரையறை செய்யலாம். நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதில் நோக்காகக் கொள்ளப்படுகின்ற நிறுவனத்தின் தொழிற்பாடுகள் கீழே காட்டப்பட்டவாறு 07 முக்கிய பகுதிகளாக பிரதானமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### அ. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

பங்குபற்றுநர்களின் தொழில்சார் தகைமைகளை அதிகரிப்பதற்கும் அவர்களது ஆற்றல்களை உயர்த்துவதற்கும் கல்விசார் கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகளின் சான்றிதழ் வழங்குவதற்கு பங்குபற்றுநர்கள் திருப்தியான கல்விசார் பதிவினை பேணுவதற்கும் திருப்திகரமான கல்விசார் பதிவுகளைப் பேணவும் அவர்கள் பதிவு செய்துள்ள கற்கை நெறிகளின் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கும் வேண்டப்படுகின்றனர்.

பின்வரும் பாடநெறிகள் கல்விசார் வகுதியினுள் உள்ளடக்கப்படுகின்றன.

- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டம் (வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து)
- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்ட விரிவாக்க முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி
- புத்தகம் பதியுநர் மற்றும் பெருந்தோட்ட கணக்கீடு சான்றிதழ் கற்கைநெறி
- மனிதவள முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி
- வியாபார ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி
- தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி
- தேயிலை தயாரித்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை முகாமைத்துவம் ஆகியவற்றில் தேசிய சான்றிதழ் பரீட்சை
- நடுகை பயிலுநர்களுக்கான அறிமுகக் கற்கைநெறி
- பயிர்ச்செய்கை பயிலுநர்களுக்கான உயர்தர பயிற்சி கற்கைநெறி

#### ஆ. தொழில்சார் பாடநெறி

தொழில்சார் கற்கை நெறிகளின் பிரதான குறிக்கோள் வேறுபட்ட விடயங்களில் கோட்பாடுகள், செயன்முறை அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதாகும். பங்கேற்பாளர்களின் தொழில்வாய்ப்புகளுக்கு அணுகுவதற்கும் அதிகரிப்பதற்கும் ஏற்றவாறு இக்கற்கை நெறிகள்

வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமது நிறுவனத்திற்கு அவர்களின் பெறுமதியினை அதிகரிப்பதற்கும். நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் பாடநெறிகள் பின்வருமாறு-

- தேயிலை தயாரித்தலும், தொழிற்சாலை செயன்முறைகளும்
- இறப்பர் தயாரித்தலும், தொழிற்சாலை செயன்முறைகளும்
- தெங்கு பதப்படுத்தல் (தொழில்நுட்பமும் செயன்முறையும்)
- மொழித் தேர்ச்சிப் பரீட்சை
- தேயிலை பயிராக்கவியல் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டம்
- இறப்பர் பயிராக்கவியல் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டம்

**(இ) திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இவ்வகை நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த தொழில் ஒன்றுக்கு நேரடியாக தொடர்புடைய திறன்களையும் கொள்ளளவினையும் அதிகரிப்பதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில் கடமைகளுடன் தொடர்புடைய நவீன தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட முறைகளை பங்கபற்றுநருக்கு பிரபல்யப்படுத்தவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்வரும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் நடாத்துகின்றது.

- செயலமர்வுகள், பயிறசிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்
  - திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
  - தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
  - முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
  - சிறுஉடைமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

**(ஈ)** பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெளியீடுகள், (பெருந்தோட்ட முகாமைத்துவ சஞ்சிகை, செய்திக் கடிதம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர் கையேடுகள், பாடப் புத்தகங்கள் மற்றும் ஏனைய பருவகால சஞ்சிகைகள்

**(உ)** பெருந்தோட்ட முகாமைத்துவ துறைக்கு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல். அத்துடன் அரசாங்க/ தனியார் துறை நிறுவனங்களுக்காக ஊழியர்களை தெரிவு செய்தல் மற்றும் பதவி உயர்த்தலுக்கான நுண்ணறிவுப் பரீட்சைகளை நடாத்துதல் (வாய்மூல மற்றும் எழுத்துமூல பரீட்சைகள்)

**(ஊ)**தகைமையுடைய நிறைவேற்று அலுவலர்களுக்காக நிறுவனத்தின் தொழில்சார் உறுப்புரிமையினை வழங்குதல். (கௌரவ உறுப்புரிமை, இணை உறுப்பினர் மற்றும் மாணவ உறுப்பினர்)

**(எ)** வெளிவாரி நிறுவனங்கள் தமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் தொடர்புடைய செயற்பாடுகளை நடாத்துவதற்கும் தேவையான வசதிகளை வழங்குதல். (உணவு, தங்குமிடம், விரிவுரை மண்டபங்கள் போன்றன)

## 4.1 ஆண்டின் போதான பயிற்சிச் செயற்பாடுகள்

நிறுவனம், அடிப்படையாக இரண்டு வகையான நிகழ்ச்சித்திட்டங்களை அதாவது நிறுவனத் துறைக்கான வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திறைசேரி நிதியினைப் பயன்படுத்தி சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடாத்தியது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான கற்கை விபரக் குறிப்புக்களில் உள்ளடக்கியிருந்ததுடன் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



சிறு உடைமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை



தலைமைத்து பயிற்சி

## அட்டவணை I

## வருமானம் ஈட்’ டும் நிகழ்ச்சித் திட்டங்கள் - 2014

| இல. | நிகழ்ச்சித் திட்டங்களின் வகை | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் காலம் | பேங்கு பற்றுனர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டம் | 01 | 03 வருடங்கள் | 92 |
| 02 | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா | 01 | 18 மாதங்கள் | 17 |
| 03 | தேயிலை தயாரித்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை முகாமைத்துவத்தில் தேசிய சான்றிதழ் பரீட்சை | 01 | 09 நாட்கள் | 34 |
| 04 | இறப்பர் தயாரித்தல் மற்றும் தொழிற்சாலை முகாமைத்துவத்தில் தேசிய சான்றிதழ் பரீட்சை | 01 | 07 நாட்கள் | 11 |
| 05 | பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி | 01 | 12 மாதங்கள் | 17 |
| 06 | புத்தகம் பதியுநர் மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் கற்கைநெறி | 01 | 12 மாதங்கள் | 19 |
| 07 | வியாபார ஆங்கில டிப்ளோமா | 01 | 12 மாதங்கள் | 11 |
| 08 | இறப்பர் கள உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி | 01 | 05 நாட்கள் | 40 |
| 09 | தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான திறன் அபிவிருத்தி | 01 | 05 நாட்கள் | 18 |
| 10 | நடுகை பயிலுநர்களுக்கான அறிமுக பாடநெறி | 01 | 06 மாதங்கள் | 29 |
| 11 | முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 01 நாள்/02 நாட்கள் | 408 |
| 12 | கறுவா பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம் | 01 | 02 நாட்கள் | 49 |
| 13 | இறப்பர் விரிவாக்கல் அலுவலர்களுக்கான இறப்பர் அபிவிருத்தி | 03 | 05 நாட்கள் | 95 |
| 14 | விடேச நிகழ்ச்சித்திட்டங்கள் | 04 | 01 நாள் | 153 |
| | **மொத்தம்** | **32** | | **993** |

## 4.2 பெருந்தோட்டத் துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

2014 ஆம் ஆணடில் எதிர்பார்க்கப்பட்ட மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய ஒப்பீடு கீழே தரப்பட்டுள்ளது. 2014 இன் விளம்பர்க குறிப்பேட்டில் குறிப்பிட்டதைப்போன்று 64 நடாதத்தி 1,030 பேருக்கு பயிற்சி வழங்குவதற்கு நிறுவனம் எதிர்பார்த்த அதேவேளை பயிற்சி செயற்பாடுகளில் இருந்து ரூபா 17.72 மில் தொகையினை ஈட்டுவதற்கும் எதிர்பார்த்தது. எனினும், 32 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 993 பேரை பயிற்றுவிக்க இயலுமாகவிருந்ததுடன் ரூபா 10.036 மில் தொகையினையும் ஈட்டியது. நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் இவ் ஆண்உடன் செயலாற்றுகை 65% ஆகவிருந்ததுடன் இலக்குகளுக்கெதிராக 96% ஆளணி பயிற்றப்பட்டனர். இலக்கிற்கு எதிராக ஈட்டப்பட்ட வருமானம் 59% ஆகும்.

**அட்டவணை II**

**வருமானம் ஈட்டும் பயிற்சி நிகழ்ச்சிகள் - 2014- திட்டமிடப்பட்டதும் உண்மையானதும்**

| **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **திட்டமிடப்பட்டது** | | | **உண்மையானது** | | | **முன்னேற்றம்** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மில்) | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மில்) | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மில்) |
| கல்விசார், தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் | 16 | 327 | 11.830 | 8 | 230 | 6.660 | 50% | 70% | 56% |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 6 | 90 | 1.388 | 2 | 58 | 0.718 | 33% | 64% | 51% |
| விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 | 400 | 1.500 | 7 | 248 | 0.866 | 53% | 62% | 57.% |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 178 | 0.979 | 14 | 408 | 1.332 | 116% | 229% | 136% |
| தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 2 | 35 | 0.175 | 01 | 49 | 0.050 | 50% | 140% | 28% |
| வெளிவாரிப் பரீட்சைகள் | | | 1.200 | | | 0.410 | | | 34% |
| **மொத்தம்** | **49** | **1030** | **17.072** | **32** | **993** | **10.036** | **65%** | **96%** | **59%** |





**அட்டவணை III**
**வருமானம் ஈட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் இலாப நட்ட பகுப்பாய்வு**

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | வருமானம் ( ரூபா மில்) | செலவு ( ரூபா மில்) | இலாப நட்ட |
|---|---|---|---|
| கல்விசார், தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் | 6.660 | 2.820 | 3.840 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.718 | 0.350 | 0.368 |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.332 | 0.670 | 0.662 |
| தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.050 | 0.042 | 0.008 |
| விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.866 | 0.409 | 0.457 |
| வெளிவாரிப் பரீட்சைகள் | 0.410 | 0.111 | 0.299 |
| **மொத்தம்** | 10.036 | 4.402 | 5.634 |

## *4.3* சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (திறைசேரி நிதியினைப் பயன்படுத்தி)

சிறு உடைமையாளர்களின் அறிவினையும் திறன்களையும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ மஹிந்த சமரசிங்க அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2011 இலிருந்து சிறு உடைமையாளர்களுக்கான பயிற்சிகளை நிறுவனம் நடாத்த ஆரம்பித்தது. திறைசேரி நிதியினைப் பயன்டுத்தி இந் நிகழ்ச்சிகளுக்கான செலவுகளை நிறுவனம் கையாண்டது. பங்குபற்றுநர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படவில்லை.
பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் சிறு உடைமையாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு, 2014 சிறு உடைமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திறைசேரி ரூபா 10 மில் வழங்கியதுடன் இறப்பர், தேயிலை தெங்கு,மரமுந்திரிகை, கரும்பு மற்றும் கறுவா சிறு ஊடைமையாளர்களை உள்ளடக்கி 25, 100 சிறு உடைமையாளர்களுக்காக 355 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

சிறுஉடைமையாளர் நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்ளளவு விருத்தியின் கீழ் கருத்திற் கொள்ளப்பட்டு அவற்றுக்கான செலவினம் மூலதனச் செலவினமாக கொள்ளப்படுகின்றது. மீளாய்விற்குட்படும் ஆண்டின் போது சிறு உடைமையாளர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் உண்மையான எண்ணிக்கை மற்றும் பயிற்றப்பட்ட சிறு உடைமையாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை பின்வரும் அட்டவணை காடுகின்றது.



தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான பயிற்சி

## அட்டவணை IV

**சிறு உடைமையாளர்களுக்கான கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2014**

| நிகழ்ச்சிகளின் வகை | நிகழ்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர் எண்ணிக்கை | கிரயம் |
|---|---|---|---|
| இறப்பர் | 172 | 14,105 | 5.203 |
| தேயிலை | 102 | 6,329 | 2.351 |
| தெங்கு | 54 | 3270 | 1.755 |
| மரமுந்திரிகை | 10 | 508 | 0.188 |
| கரும்பு | 11 | 547 | 0.276 |
| கறுவா | 06 | 341 | 0.208 |
| **அடையப் பெற்ற மொத்தம்** | 355 | 25,100 | **9.981** |
| **திட்டமிடப்பட்ட மொத்தம்** | 200 | 8000 | **10.00** |

இவ் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் தேயிலை, இறப்பர், தெங்கு, மர முந்திரிகை, கரும்பு, மற்றும் கறுவா தோட்டங்களில் அவ்வப் பிராந்தியங்களில் நடாத்தப்பட்டன. இம் முறையிலானது வகுப்பறை விரிவுரைகளை விட செயன்முறை முறை அமர்வுகளுக்க அதி நேரம் வழங்கியது. அத்தகைய நிகழ்ச்சிகளின் காலம் ஆகக்கூடியது 5 மணித்தியாளஙகளாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

மேற்குறித்த விபரங்கள் பின்வருமாறு சாரம்சப்படுத்தப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படலாம்.

**அட்டவணை VI**

**சாரம்சப்படுத்தப்பட்ட விபரங்கள்**

| | 2013 | 2014 | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| நிகழ்சிகளின் எண்ணிக்கை (மொத்தம்) | 258 | 387 | 50 |
| பங்குபற்றுநர் எண்ணிக்கை (மொத்தம்) | 11,422 | 26,093 | 128 |
| சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 236 | 355 | 50 |
| பயிற்றுப்பட்ட சிறு உடைமையாளர்களின் எண்ணிக்கை | 12,149 | 25,100 | 106 |
| பயிற்சி வருமானம் | ரூபா 11.573 மில். | ரூபா 10.037 மில். | -13 |
| சிறு உடைமையாளர் பயிற்சி மீதான செலவினம் | ரூபா 7.49 மில் | ரூபா 9.98 மில்.. | 33 |

2014 இல் சிறு உடைமையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அதிகரிப்பின காரணமாக மொத்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அதிகரித்துள்ளன. எனவே, எதிர்பார்க்கப்பட்டவாறு வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.





**4.4 பயிற்சி முறையியல்**

நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணையப்பெற்ற பல்வேறு விடயங்களை கருத்திற் கொண்டு கல்வி சார் கற்கைநெறிகளையும் பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்ற முறையியல் தரப்படுத்தப்பட்டுள்ளது. கால அட்டவணை, ஒவ்வொரு கற்கை நெறிகளினதும் காலம் ஆகியவற்றை தீர்மானிப்பதில் பங்குபற்றுநர் மட்டம், அவர்களின் நிலை, பணியாற்றும் இடங்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள கடமை விடுமுறை போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நீண்டகால கல்விசார் நிகழ்ச்சிகள், பாடத் தொகுகுகள் அடிப்படையில் நடாத்தப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் பல பாடத்தொகுப்புகள்/ கூறுகளாக பிரிக்கப்பட்டு இடைவிட்ட அடிப்படையில் நடாத்தப்பட்டன. விரிவுரை/ செயன்முறை வகுப்புகளுக்கான திகதிகளை நிர்ணயிப்பதில் தோட்டங்களில் இருந்து பங்குபற்றுநர்களின் வருகைக்கு வேண்டப்பட்ட தினங்கள் தவிர்க்கப்பட்டன. பொதுவாக நீண்ட கால

கற்கைநெறிகளின் விரிவுரை வகுப்புகள் தொடர்ச்சியான அடிப்படையிலன்றி மாதம் ஒன்றிற்கு 6 நாட்கள் மாத்திரம் அட்டவணைப்படுத்தப்படுகின்றது.
அடிப்படை மற்றும் மிகவும் அனேகமாக வெள்ளிக்கிழமை உட்பட முதலாம் மற்றும் மூன்றாம் வார இறுதிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வணுகுமுறையின் பிரதான குறிக்கோள் தோட்டங்களிலிருந்து தமது வரவின்மையின் தாக்கத்தினை குறைக்கக்கூடியதாக இருந்தது. எனினும், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பிரச்சினைகள் போன்ற கற்கைநெறிகள் 5 முதல் 7 வரையான தொடர்ச்சியான திகதிகளில் நடாத்தப்பட்டன. ஆனால் முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் அனேகமானவை 1 நாள் அல்லது 2 நாட்கள் காலத்திற்கான செயலமர்வாக நடாத்தப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சிறு உடைமையாளர்கள் என்போருக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அடிப்படையில் 1 நாளாக (5 முதல் 6 மணித்தியாலங்கள்) மட்டுப்படுத்தப்பட்டதுடன் தொடர்புடைய பிரதேசங்களில்/ பிராந்தியங்களில் நடாத்தப்பட்டன.

நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும்போது நிறுவனமானது குழுக் கலந்துரையாடல்கள், குழுப் பயிற்சிகள், செய்து காட்டல்கள், விடய ஆய்வுகள், கள விஜயங்கள் மற்றும் அனுபவத்தினை பரிமாற்றிக் கொள்ளுதல் போன்ற நவீனமாக முன்னேற்றம் அடைந்த பயிற்சி முறைகளைப் பயன்படுத்துகின்றது.

கள மற்றும் தொழிற்சாலை பணியாளர்களுக்கான பயிற்சிகளில் மிகவும் நடைமுறை சார் வகுப்புகள் பிரயோகிக்கப்படுகின்ற அதேவேளை கல்விசார் கற்கை நெறிகளில் விரிவுரை வகுப்புகளுக்காக அதிக அழுத்தம் வழங்கப்படுகின்றது. சிறு உடைமையாளர்களுக்கான மற்றும் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சிகளின் காலத்தின் சுமார் 80% செயன்முறை வகுப்புகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அத்தகைய முறையியல்களைப் பிரயோகிப்பதன் ஊடாக வாசிப்பதற்கும், தனது கவனத்தை செலுத்துவதற்கும், கவனமாக செவிசாய்ப்பதற்கு அல்லது எழுதுவதற்கு விரும்பாதவர்களாக அவர்கள் காணப்படுவதனால் ஒவ்வொரு வகுப்பிலும் பயிற்சிச் செயற்பாடுகள் மீது செயலாற்றல் மிக்கவாறு கவனம் செலுத்துவதற்கு பங்குபற்றுநர்களை ஊக்குவிக்கக்கூடியதாக இருந்தது.

பெருந்தோட்ட அலுவலர்களுக்கான முகாமைத்துவத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் வகிபாகம், விடயஆய்வுகள், முகாமைத்துவ போட்டிகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல் போன்ற வகுப்புகளுக்கு அதிக அழுத்தம் வழங்கப்பட்டது. கடந்த காலத்தைப் போன்றே நிறுவனம் அனைத்து பாடங்களையும் கற்பிப்பதற்கான போதிய பயிற்சி ஆளணியினரை ஆட்சேர்ப்பதற்கும் வேதனாதிகளை வழங்குவதற்கும் இயலுமையாக இருந்தமையினால் வருகைதரு வள ஆளணியினர் மீது அதிகமாக சார்ந்திருப்பதுடன் இலாபகரமான மாற்றுவழியாகவும் இது கருதப்படுகின்றது. மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின்போது நிறுவனமானது 2014 ஒக்டோபர் வரை 5 வள ஆளணியினரை மாத்திரம் கொண்டிருந்ததுடன் அவர்களில் ஒருவர் பதவி விலகினார். நிறுவனமானது தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கரும்பு போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து புற வள ஆளணியினரின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்களில் அனுபவத்தினையும் வெளிப்பாட்டினையும் கொண்டிருந்த பிரபல்யமான பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து


பெரந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா- குழு கலந்துரையாடல

விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொண்டது. கல்விசார் கற்கைநெறிகளுக்கும் ஏனைய கற்கை நெறிகளுக்கும் வள ஆட்களைத் தெரிவு செய்வதில் அவர்களது கல்விசார் பின்னணி மற்றும் துறையில் அவர்களது அனுபவம் கற்பித்தல் பயிற்றுவித்தல் ஆற்றல்கள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டன.

### 4.5 பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான மானிப் பட்டம்

சிறு உடைமையாளர்கள் உள்ளடங்கலாக பெருந்தோட்ட துறையில் இணைக்கப்பட்டுள்ள சிரே'ட மற்றும் நடுத்தர மட்ட அலுவலர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட முகாமைத்துவ மற்றும் தொழினுட்ப அபிவிருத்திக்கான புதிய பரிமாணம் ஒன்றினை பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் விஞ்ஞான மானிப்பட்டம் வழங்குகின்றது.

2006 வரை பெருந்தோட்ட ஆளணியினருக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. டிப்ளோமா மட்டத்தினை விட உயர்ந்த மட்டம் ஒன்றில் உயர் தகைமை, முகாமைத்துவ திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் பண்புகளை அடைந்து கொள்வதற்கு இத்துறையிலுள்ள தனிப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை கண்டறிவதற்கு பெருந்தோட்ட துறையில் தேவையொன்று காணப்பட்டது. இம்மட்டத்தில் பெருந்தோட்ட துறையில் தகைமைகளுக்கான கேள்வி நிறைவு செய்யப்படவேண்டியிருந்தது. எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு முகாமையாளர்கள் விருத்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன தொழில்சார் ரீதியாக அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு தயார்படுத்தப்பட வேண்டி இருந்தது. இக்கைத்தொழிலில் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத் தன்மை மற்றும் அதன் நிலைபெறு தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு இவ்விடைவெளி நிரப்பபட்டு பெருந்தோட்ட துறையிலுள்ள சிரே'ட மற்றும் நடுத்தர மட்ட அலுவலர்களுக்கான பெரும்பாக மற்றும் நுண்பாக மட்டங்களில் விஞ்ஞான கொள்கைசார் மற்றும் முகாமைத்துவ தகைமைகளை உயர் தரத்தில் வழங்க வேண்டியிருந்தது. இந்நோக்கத்திற்காக அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கேற்ப அதிக முயற்சிகளை

மேற்கொண்டு பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் விஞ்ஞான மானி 2006ஆம் ஆண்டிலிருந்து தோற்றம் பெற்றதுடன் நிலவிய தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் இணைந்து வழங்குகின்றன. இது 3 வருட கற்கைநெறி ஒன்றாவதுடன் தொலைக்கல்வி கற்றல் பாட நெறியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்தில் 21 பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் இப்பாடநெறிக்கு பதிவு செய்ததுடன் 2008 இல் 17 பேர் சித்தியடைந்தனர். ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை மற்றும் கற்கைநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோரின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.



| | ஆண்டு | பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2006 | 21 | 17 |
| 2 | 2007 | 17 | 11 |
| 3 | 2008 | 35 | 21 |
| 4 | 2009 | 34 | 13 |
| 5 | 2010 | 47 | 21 |
| 6 | 2011 | 32 | |
| 7 | 2012 | 54 | நிறைவுசெய்யப்பட வேண்டியுள்ளது |
| 8 | 2013 | 80 | |
| 9 | 2014 | 92 | |




2011 மற்றும் 2013 ஆம் மாணவர்களின் பெறுபேறு நிறைவு செய்யப்படவேண்டியுள்ளது. 2014 இல் 165 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி பட்டப்படிப்பு கற்கைநெறியினை தொடர்வதற்கு 92 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேற்குறித்த வரைபடம் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டப்படிப்புக்கான கேள்வி கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்பதனையும் சாத்தியமான போக்கொன்றினையும் காண்பிக்கின்றது. அபேட்சகர்களுக்கான சான்றிதழ் வழங்குதல்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தினால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டப்படிப்பு கற்கை நெறியினை வழங்குவது நிறுவனத்திற்கு கௌரவமிக்க ஒன்றாகும்.

### 4.6 நடாத்தப்பட்ட வெளிவாரிப் பரீட்சைகள்

பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பல்வேறு பாடங்களின் பரீட்சைகளை நடாத்துவது தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். 1987 முதல் பல அரசாங்க/ தனியார் துறை நிறுவனங்களுக்கு அத்தகைய சேவைகளை இது வழங்கி வருகின்றது. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின்போது நிறுவனம், கீழே விவரிக்கப்பட்டவாறு பல நிறுவனங்களில் ஊழியர்களை தெரிவு செய்வதற்கும் பதவியுயர்த்துவதற்கும் 11 பரீட்சைகளை நடாத்தியது.

| நிறுவனம் | பரீட்சைகளின் எண்ணிக்கை | அபேட்சகர்களின் எண்ணிக்கை | ஈட்டப்பட்ட வருமானம் ரூபா. |
|---|---|---|---|
| இலங்கை தேயிலைச் சபை | 06 | 127 | 199,158.25 |
| தேயிலை சிறு உடைமையாளர்கள் அபிவிருத்தி சபை | 01 | 54 | 81,285.00 |
| தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் | 03 | 50 | 68,283.50 |
| தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 01 | 04 | 43,368 |
| **மொத்தம்** | **11** | **235** | **392,094.75** |

### 4.7 நூலக வசதிகள்

நிறுவனத்தின் நூலகம் தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை, கணக்கியல் பொது முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மூலோபாய முகாமைத்துவம், சாதகமாக சிந்தித்தல், நேர முகாமைத்துவம், உற்பத்தித்திறன், தொழிற்பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் அத்துடன் தர முகாமைத்துவம் போன்ற பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புபட்ட பல விடயங்களை தொடர்புபடுத்தி பல விடயங்களைக் கொண்டுள்ளது. இது கொடுத்துதவுதம் மற்றும் உசாத்துணைவு ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. நீண்ட கால கற்கை நெறிகளை தொடருகின்ற பங்கேற்பாளர்களும் நிறுவனத்தின் பதவியணியினரும் கொடுத்துதவுதல் பகுதிதியில் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவர்களாக காணப்படுகின்ற அதேவேளை குறுகிய கால கற்கை நெறிகளின் பங்கேற்பாளர்கள்,



நிறுவனத்தின் பதவியினர், நிறுவனத்தின் புறவளவாளர்கள், பிரதேச பாடசலை மாணவர்கள் மற்றும் வெளிவாரி வளவாளர்கள் போன்றோர் உசாத்துணைவு பிரிவைப் பயன்படுத்த முடியும்.

### 4.8 நிறுவனத்தின் தொழில்சார் உறுப்புரிமை

1987 இன் 5 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மூலப்பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டு தகுதியுடைய பெருந்தோட்ட அலுவலர்களுக்கு நிறுவனம் தொழில்சார் உறுப்புரிமைகளை வழங்குகின்றது. ஒவ்வோரு வதுகுதியின் கீழ் வழஙடகபட்ட உறுப்புரிமைகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| கொளரவ உறுப்புரிமை | - | 20 |
| கூட்டு உறுப்புரிமை | - | 198 |
| இணை உறுப்புரிமை | - | 18 |
| மாணவ உறுப்புரிமை | - | 02 |
| **மொத்தம்** | **-** | **238** |

### 4.9 வெளியீடுகள்

நிறுவனமானது வழமையாக பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் இரண்டு சஞ்சிகைகளையும் நான்கு செய்திக் கடிதங்களையும் வெளியிடுகின்றது. பயிர் ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்சார் பயிர் நடுநர்கள் போன்றோரினால் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளை சஞ்சிகை உள்ளடக்குகின்றது. எழுத்தாளர்களின் நிற புகைப்படங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய புகைப்படங்கள் போன்றவற்றை உட்சேர்ப்பதன் ஊடாக சஞ்சிகை எடுத்துரைத்தலில் மாற்றங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. வயம்ப பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் எஸ்.ஜே.பி.ஏ. ஜயசேகர, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழத்தின் கணக்கியல் துறை பேராசிரியர் கே.பி.எம். பொன்சேகா, இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி காமினி செனவிரத்ன, தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிர் உடலியல் பிரிவின் பிரதானி கலாநிதி (திருமதி) எஸ். ரணசிங்க மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைப் பிரிவின் பிரதானி திரு. பி.ஏ.டி. சமன்சிறி போன்றோர்களை பதிப்பாசிரியர்கள் குழு உள்ளடக்கியிருந்தது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி என். யோகரட்னம், பிரதம பதிப்பாசிரியராக இருந்தார். சஞ்சிகையின் மேம்படுத்தப்பட்ட தரத்தின் காரணமாக பெருந்தோட்டத் துறை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புபட்ட பெருந்தோட்டங்களுடன் இணையப்பெற்ற நிறுவனங்களுடன் தொடர்புபட்ட நிறைவேற்று அலுவலர்களிடமிருந்தும் அதிக கேள்வி நிலவியது.




## 4.10 வளாகத்தினுள் கிடைக்கப்பெறும் வசதிகள்



கல்விசார் மற்றும் பயிற்சி நிறுவனம் ஒன்றுக்காக வேண்டப்படும் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் அனேகமாக நிறுவனம் கொண்டுள்ளது. இருந்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்வி அத்துடன் பயிற்சி தொடர்பில் சந்தையில் காணப்படும் போக்கிற்கு அமைய தரப்படுத்தலும் நவீனமயப்படுத்தலும் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது. அதுருகிரிய நிலையத்தில் காணப்படும் வசதிகள், ஒரே நேரத்தில் 200 பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய கேட்போர் கூடம் ஒன்றினையும் குளிரூட்டப்பட்ட 3 விரிவுரை மண்டபங்களையும் 6000 இற்கும் மேற்பட்ட புத்தகங்களுடன் கூடிய நூலகம் ஒன்றினையும், 60 பேருக்கு தங்குமிட வசதியளிக்கக்கூடிய விடுதியொன்றினையும் கொண்டுள்ளது.

வளாகத்தினுள் பணிப்பாளர் பங்களா உள்ளடங்கலாக 6 வதிவிட விடுதிகளும் காணப்படுகின்றன. நிறுவனத்தில் 8 வாகனங்கள் கிடைக்கப்பெறுகின்றன. எவ்வாறாயினும் வெளியிடங்களில் பயிற்சிகள் நடாத்துவதற்காக அவற்றில் அனேகமானவை பயன்படுத்தப்படுகின்றமையினால் போக்குவரத்து தேவைகளை நிறைவுசெய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை போதாமையாக இருக்கின்றது. 20 வருடங்களுக்கு மேல் பழமையான 2 வாகனங்கள் 2014 இல் திருத்தப்பட்டன. தலைவர், பணிப்பாளர் மற்றும் பயிற்சிப் பிரிவு உள்ளடங்கலாக அலுவலகக் கட்டிடம் அண்மையில் புதுப்பிக்கப்பட்டது. இருந்தபோதிலும், 50 வருடங்கள் பழமையான கட்டிடம் திருத்தப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்குறித்த அலுவலர்களுக்கு வசதி வழங்குவதற்கு புதிய சுற்றாடல் நட்புமிகு புதிய கட்டிடங்கள் உடனடியாக கட்டப்பட வேண்டிய அவசியத் தேவையொன்று காணப்படுகின்றது. நிறுவனத்தின் வளாகத்தினுள் பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் எதுவும் காணப்படவில்லை. பயிற்சி செயற்பாடுகளுக்காகவும் நிருவாக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடங்கள் தவிர கிடைக்கப்பெறுகின்ற அனைத்து கட்டிடங்களும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு



பணியகத்தினால் நடாத்தப்படும் கொரிய பயிற்சி நிகழச்சித்திட்டங்களுக்காக முழுமையாக பயன்படுத்தப்படுகின்றன.

பொகவன்தலாவ தோட்டத்தில் அமையப்பெற்றுள்ள ஏனைய பிராந்திய பயிற்சி நிலையமும் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு தேவைப்பட்ட அவசியமான வசதிகளைக் கொண்டுள்ளது. எனினும், நவீன பயிற்சி வசதிகளை வழங்குவதற்காக இது நிச்சயமாக மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. சுமார் 60 பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய கேட்போர் கூடமும் சுமார் 100 பங்கேற்பாளர்களுக்கு இடவசதியளிக்கக்கூடிய 02 நடுத்தர அளவிலான விரிவுரை மண்டபங்களும் கிடைக்கப்பெறுகின்றன. பொகவனதலாவையில் காணப்படும் விடுதி ஒரேநேரத்தில் சுமார் 70 பேருக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடியது. இது ஓரளவு பெரிய உணவருந்தும் மண்டபத்தினையும் 03 அலுவலக அறைகளையும், 600 புத்தகங்களுக்கு மேல் காணப்படுகின்ற சிறிய நூலகம் ஒன்றினையும் கொண்டுள்ளது. நிலைய அங்கு நிலைய முகாமையாளருக்கான பங்களாவொன்று காணப்படுவதுடன் ஒரே நேரத்தில் சுமார் 10 பேருக்கு தங்குமிட வசதியளிக்கக்கூடிய விருந்தினர் விடுதி ஒன்றும் காணப்படுகின்றது. விடுதி முகாமையாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரைத் தவிர நிலையத்தில் வேறு நிரந்தர பணியாளர்கள் காணப்படவில்லை. எனவே பணிப்பாளரின் முன்னனுமதியுடன் பயிற்சி அமர்வுகளின் போது தேவையான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டனர். 03 பணியாளர்களம் 01 காவலாளியும் அமைய அடிப்படையில் காணப்படுவதுடன் தற்போது பயிற்சி நிகழ்ச்சிகளுக்காவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கொரிய பயிற்சிகளுக்காகவும் அனைத்து வசதிகளும் விடுதி முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் இப்பதவியினரால் தற்போது வழங்கப்படுகின்றது.



## 4.11 2015 ஆம் ஆண்டிற்கான விளம்பரக் குறிப்பேடு

பங்காளர்கள், உள்ளக மற்றும் புற வள ஆளணியினர், முன்னைய ஆண்டுகளில் கற்கை நெறிகளை தொடர்ந்த பங்குபற்றுநர்கள் ஆகியோரின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு 2015 இற்கான விளம்பரக் குறிப்பேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தொரடகின்ற ஆண்டிற்காக விளம்பர்க குறிப்பேட்டினை தயாரிப்பதற்க பங்குதாரர்களுடன் கூட்டமொன்று கூட்டப்பட்டது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு சிறு உடைமையாளர்களுக்காக அதிகமான நிகழ்ச்சிகளை நடாத்துவதன் முக்கியத்துவம் பற்றி இக் கூட்டத்தில் பல பங்குபற்றுநர்கள் எடுத்துக்காட்டிணர். மேலும், சிறப்பான செயலாற்றுகைக்காக புதிய பயிற்சி தேவைகளை இனய்காண்பதற்கும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நடப்பில் உள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் பெருந்தோட்ட கம்பனிகளின் மனித வள முகாமைத்துவ முகாமையாளர்களுடன் சில கூட்டங்கள் நடாத்தப்பட்டன. மேற்குறித்த செயன்முறைகளின் விளைவாக 2015 விளம்பர குறிப்பேட்டில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கல்விசார் /தொழில்சார் பாடநெறிகள் | - 17 |
| முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகள் | - 07 |
| திறன் அபிவிருத்தி பாடநெறிகள் | - 06 |
| அறிமுகக் கற்கைநெறிகள் | - 06 |

பின்வரும் பாடநெறிகளும் கேள்விமிக்க பாடநெறிகளாக பாடத்தொகுப்பு கையேட்டில் உள்ளடக்கப்பட்டு வந்தன.

தொழில்நுட்ப அபிவிருத்தி பாடநெறிகள் - 04
தொழிலாளர் அபிவிருத்தி பாடநெறிகள் - 03

வருமானம் ஈட்டுகின்ற மேற்குறித்த பாடநெறிகளுக்கு மேலதிகமாக திறைசேரி நிதியளிப்புடன் சிறு உடைமையாளர்களுக்கு பின்வரும் பாடநெறிகளை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (கட்டணமின்றி)

| | |
|---|---|
| தேயிலை | - 60 |
| இறப்பர் | - 50 |
| தெங்கு | - 50 |
| கரும்பு | - 10 |
| மரமுந்திரிகை | - 10 |
| பனை | - 10 |
| கருவா | - 10 |
| மொத்தம் | - 200 |

**4.12 பயிற்சிச் செயற்பாடுகளின் புதிய பரிமாணங்கள்**

2015 இற்கான பாடவிபரத் தொகுப்பில் அட்டவணைப்படுத்தப்பட்ட பாடநெறிகளுக்கு மேலதிகமாக பெருந்தோட்டத்துறையில் இணைக்கப்பட்ட வேறுபட்ட ஆளணி வகுப்பினருக்காக பின்வரும் புதிய பாடநெறிகளை வடிவமைத்து உருவாக்குவதற்கு 2015 இன் ஆரம்பத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

அ. தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் பற்றி பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்காக விசேட கவனம் செலுத்துவதற்காக தேவைக்கேற்ற பயிற்சி பாடநெறிகள்

ஆ. மனோபாவ அபிவிருத்தி மீது பெருந்தோட்டத்துறை நிறைவேற்று தரம் அல்லாத அலுவலர்களுக்கான தேவைக்கேற்ற பயிற்சி பாடநெறிகள்

இ. பெருந்தோட்டத்துறை ஆளணியினருக்கான தேவையினை அடிப்படையாகக் கொண்ட கணனியைக் கொண்ட பயிற்சி பாடநெறிகள்

ஈ. தொடர்புடைய பிராந்தியங்களில் நடாத்தப்படவுள்ள பெருந்தோட்ட முகாமைத்துவம் பற்றிய வசதிக்கேற்ற பாடநெறிகள்

**5.0 நிருவாகப் பிரிவு**

உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) நிருவாகப் பிரிவின் தலைவராக பணியாற்றுகின்றார். ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட மொத்த பதவியணி 57 ஆகும். ஆனால் எமது ஆட்சேர்ப்பு தகைமைகள் உயர்வாக உள்ள அதேவேளை வழங்கப்படும் சம்பளம் போட்டித்தன்மை அற்றிருப்பது போன்ற காரணங்களினால் இவ்வாண்டின் போது சில பதவி வெற்றிடங்களை நிரப்புவது சாத்தியமற்றதாகவிருந்தது. (உதாரணமாக பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் இதற்கு மிகக் குறைந்த ஆர்வமே காட்டப்பட்டது. விண்ணப்பத்திருந்தவர்கள் வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் பூர்த்தி செய்திருக்கவில்லை).

அத்துருகிரிய தலைமை அலுவலகத்தில் விடுதி முகாமையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதனால், தொடர்புடைய செயற்பாடுகளை பணி மேற்பார்வையாளர்

கவனித்தார் முகாமைத்துவ உதவியளர்களை உள்ளடக்குகின்ற உணவுக் குழுவோன்றினால் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்வது மேற்கோள்ளப்பட்டது. இக் குழு ஆறு மாதங்ளுக்கொரு தடவை மாற்றப்படுகின்றது. உணவுப் பொருடகளை கொள்வனவு செய்யும் இம்முறையானது கொள்வனவு செயற்டபாடுகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதிசெய்கின்றது. பொகவந்தலாவை மற்றும் அத்துருகிரிய இடங்களில் உள்ள இரு விடுதிகளும் நிகழ்ச்சிமஷத் திட்டங்களில் பங்கேற்போருக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குகின்றது. நாளொன்றுக்கு உணவு மற்றும் சிற்றுண்டிகளுக்காக பங்கேற்பாளர் ஒருவரிடமிருந்து ரூபா 1,120.00 அறவிடப்படுவதுடன் தங்குமிட வசதிக்காக ரூபா 300.00 அறவிடப்படுகிறது. தொடர்புடைய வசதிகளனதும் சேவைகளினதும் செலவுகளை சமாளிப்பதற்கு மாத்திரமே இத் தொகை அறவிடப்படுகின்றது. இச் சேவைகளையும் வசதிகளையும் பயன்படுத்திய பங்குபற்றுநர் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளனர். இச் சேவைகளின் தரத்தினை மேலும் அதிகரிப்பதற்கு நிறுவனம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

மீளாய்விற்குட்படும் ஆண்டின்போது கொரியா நாட்டில் தொழில் தேடுபவர்களுக்காக நிறுவனம் பயிற்சி வசதிகளை தொடர்ந்து வழங்கியது. எனவே, ஒப்பந்த அடிப்படையில் சில ஊழியர்களை நிறுவனம் ஆட்சேர்த்தது, இவ் ஆட்சேர்புக்கு சவயின் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய சம்பளங்கள் கொரிய நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்து ஈட்டப்பட்ட வருமானத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டது.

## 6.0 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது கணக்காளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. கணக்காளருக்கு உதவியளிப்பதற்காக இப்பிரிவு 05 முகாமைத்துவ உதவியாளர்களை கொண்டுள்ளது. நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம், வருடாந்த வரவு செலவுத் திட்டம் செயற்திட்டம் தயாரித்தல், மற்றும் ஆளுநர் சபை அதே போன்று வேறு வேண்டப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய காலத்தில் நிதியியல் தகவல்களை வழங்குதல் என்பற்றுக்கு இது பொறுப்பானதாகும். தற்போதுள்ள நிறுவனம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை கொண்டிருருக்கவில்லை. எனினும், 2014 இன் பிந்திய பகுதியில் உள்ளக கணக்காய்வாளருக்கான பதவியணி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, நிறுவனத்திற்கு பெருந்தோட்க் கைத்தொழில் அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காளரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. அமைச்சு மட்ட உள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கணக்காளர் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டியுள்ளதுடன், அவர் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயலாளரமாவார்.
முன்னைய ஆண்டின் அனுபவத்தினைப் போன்று கொள்னவவு செயற்பாடுகளுக்கான தனியான அலுவலகமோ அல்லது பிரிவோ காணப்படவில்லை. எனவே, ஒப்பந்தங்களை வழங்குதல், உடன்படிக்கைகளை தயாரித்தல், கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றம் கண்காணிப்புச் செயன்முறை போன்ற செயற்பாடுகள் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளபபடம் அதேவேளை பெறுகைச் செயற்பாடுகள் நிதிப்பிரிவினால் கையாளப்படுகின்றன.

## 7.0 நிதியியல் மற்றும் பௌதீக செயலாற்றுகை

2014 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான செயலாற்றுகைச் சாரம்சம் (ரூபா. மில்)

| | திட்டமிடப்பட்டது | உண்மையானது | செயலாற்றுகை |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் பெறுமானத்தேய்வு உள்ளடங்களாக. | 82.88 | 69.91 | 84.00% |
| மூலதனச் செலவினம் | 30.20 | 26.47 | 87.00% |
| மொத்தத் செலவினம் | 113.08 | 96.38 | 85.00% |
| **ஈட்ப்பட்ட மொத்த வீமானம்** | 33.650 | 25.32 | 75.00% |
| **அளிப்புகள்- மீண்டெழும்** | 30.50 | 24.79 | 81.00% |
| **அளிப்புகள்- டூலதனம்** | 25.00 | 21.50 | 86.00% |
| **மொத்த வருமானம்** | 86.48 | 70.84 | 82.00% |
| **வருமானம் ஈட்டிய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | 49 Nos. | 32 Nos. | 65% |
| **பயிலுநர் எண்ணிக்கை (வருமானம் ஈட்டியவை)** | 1030 பயிலுநர் | 993 பயிலுநர் | 96% |
| **கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | 200 எண்ணிக்கை | 355 எண்ணிக்கை | 177.5% |
| **பங்குபற்றுநர் எண்ணிக்கை** | 8000 எண்ணிக்கை | 25,100 எண்ணிக்கை | 313.5% |

மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது, மொத்த மீண்டெலும் செலவினமாக ரூபா 69.91 மில. செலவிடப்பட்டதுடன் திட்டமிடப்பட்ட தொகை மீது 84% முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது. இத் தொகையானது மூலதன சொத்துகள் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி கழிப்பு மீதான ரூபா 15.828 தொகையினையும் உள்ளடக்குகின்றது.

மூலதனச் செலவினத்திற்காக ரூபா 30.2 மில் திட்டமிடப்பட்ட தொகையில் நிறுவனம் ரூபா 26.47 மில். தொகையினை செலவிட்டது. திட்டமிடப்பட்டிருந்த தொகையின் 87% ஆக இது அறிக்கையிடப்பட்டிருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்காக திறைசேரி ரூபா 24.79 மில் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 21.5 மில் தொகையினை அளித்தது. பெருநட்தோட்ட சிறு உடைமையாளர்களின் கொள்ளளவினை விருத்தி செய்வதற்காக நிறுவனம் ரூபா 9.98 மில். செலவிட்டது. மூலதன பாதீட்டின் கீழ் பொதுத் திறைசேரியினால் இத் தொகை நிதியளிக்கப்பட்டது.

பெருந்தோட்ட பதவியினருக்கான வருமானம் உழைத்த 32 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவனம் நடாத்தி ரூபா 10.36 மில் ஈட்டியது. மேலும், பெருந்தோட்ட சிறு உடைமையாளர்களுக்காக திறைசேரியின் நிதியளித்தலுடன் 355 கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவனம் இலவசமாக நடாத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறுவனம், 993 பெருந்தோட்ட பதவி ஆளணியை பயிற்றுவித்ததுடன் இது மதிப்பிடப்பட்ட தொகையின் 96% முன.னேற்றமாகவிருந்தது. பெருந்தோட்ட சிறு உடைமையாளர்கள் என்ற

அடிப்படையில் 2014 இன் போது 25,100 பங்குநற்றுநர் பயிற்றப்பட்டுள்ளனர். இது, மதிப்பிடப்பட்ட தொகையின் 313% ஆகும்.

**வருமான வகைகள்**

| வருமான மூலம் | 2014 | 2013 | மாற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் அளிப்பு | 24.792 | 18.744 | 32.2% |
| பிற்போடப்பட்ட அரசாங்க அளிப்பில் இருந்து வருமானம் | 20.837 | 16.751 | 23.7% |
| பயிற்சி வருமானம் | 10.037 | 11.572 | (13.2%) |
| திவிட வசதிகளை வாடகைக்கு விடல் | 6.219 | 6.569 | (5.3%) |
| பொகவந்தலாவை பிராந்திய நிலையத்திலிருந்து வருமானம் | 7.823 | 8.247 | (7.8%) |
| ஏனைய வருடானம் | 1.237 | 0.837 | 47.7% |
| மொத்த வருமானம் | 70.946 | 62.722 | 12.9% |

மேற்குறித்த வரைபடங்களுக்கு அமைய மொத்த வருமானத்தின் 14% 2014 இல் பயிற்சி வருமானத்தின் மூலம் ஏற்பட்டிருந்தது. இது 2013 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்திருந்தது. வருமானத்தின் பெரும்பான்மையான பகுதி அரசாங்க அளிப்பிலிருந்து சேகரிக்கப்பட்டது. அது 2013 இல் 53% ஆக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் 64% வரை சென்றது.







***2014 இற்கா மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்)***

| மூலதனச் செலவினம் | திட்டமிடப்பட்டது | உண்மையானது | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மூலதன சொத்துகளின் புதுப்பித்தலும் மேம்படுத்தலும் | 6.80 | 6.63 | 97.5% |
| மூலதனச் சொத்துகளை பெற்றுக்கொள்ளல் | 11.90 | 9.93 | 83.4% |
| தொலைக்கல்வி பாடத் தொகுப்புகளை தயாரித்தல் | 1.50 | - | - |
| கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10.00 | 9.98 | 99.8% |
| மொத்தம் | 30.20 | 26.54 | 87.8% |

மூலதனச் செலவினத்திற்காக நிறுவனம் ரூபா. 26.54 மில்லியன் தொகையினை செலவிட்டது. இது திட்டமிடப்பட்டதன் 87.8% முன்னேற்றமாகும். ஆண்டின் பிரதான செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளது.

- பயிற்சி கட்டிடத்தினை திருத்துதல்
- விடுதிக்காக கதிரைகள் மற்றும் மேசைகள் கொள்வனவு
- கேட்போர் கூடத்திற்கான வாயுச்சீராக்கிகள் பொருத்துதல்
- சிறு உடைமையாளர்களுக்காக 355 கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

**சிறு உடைமையாளர்களுக்கு கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (ரூபா மில்லியன்)**

| கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நிகழ்ச்சிச் செலவு/ வருமானம் |
|---|---|---|---|
| இறப்பர் தொடர்புபட்டவை | 172 | 14,105 | 5.203 |
| தேயிலை தொடர்புபட்டவை | 102 | 6,329 | 2.351 |
| தெங்குடன் தொடர்புபட்டவை | 54 | 3,270 | 1.755 |
| கரும்பு | 11 | 547 | 0.276 |
| மரமுந்திரிகை | 10 | 508 | 0.188 |
| கறுவா | 6 | 341 | 0.208 |
| மொத்தம் | 355 | 25,100 | 9.985 |
| | | | |

***பற்றாக்குறை/ மிகை***

மீளாய்வு ஆண்டில் ரூபா. 1,030,263 கொண்ட மிகையொன்றினை நிறுவனம் பெற்றது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 3.452 மில்லியன் வீழ்ச்சியாக இருந்தது. குறைப்புக்கான காரணம் புதிய மீள்பெறுமதி மதிப்பிற்கு அமைய சொத்து செலவின் பெறுமானத் தேய்வாக இருந்தது.

| ஆண்டு | பற்றாக்குறை/மிகை |
|---|---|
| 2009 | (1.318) |
| 2010 | 4.780 |
| 2011 | (1.248) |
| 2012 | (4.597) |
| 2013 | 4.482 |
| 2014 | 1.030 |




நிறுவனத்தின் தேறிய சொத்து பெறுமதி 2014 இல் ரூபா. 122.218 மில்லியன் வரை அதிகரித்தது. இது 2013 இல் ரூபா. 24.619 மில்லியனாக காணப்பட்டது. தேறிய சொத்துகள் அதிகரிப்பின் பிரதான தாக்கம், ரூபா. 96.657 மில்லியன் தேறிய மீள்மதிப்பீட்டு மிகையொன்றினை அறிக்கையிட்டு மூலதனச் சொத்துகளின் மீள் விலைமதிப்பீடாக இருந்தது.

**தேறிய சொத்துகள் (2009 - 2014)**




## *8.0* முன்னைய ஆண்டுக்கெதிரான முன்னேற்றம்

முன்னைய ஆண்டின் ரூபா. 62.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா. 70.94 மில்லியன் மொத்த வருமானத்தினை நிறுவனம் எய்தியது. இவ்வருமானத்திற்கு பிரதானமாக பங்களித்த காரணி பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மீண்டெழும் அளிப்பாகும்.

முன்னைய ஆண்டின் ரூபா. 58.24 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 20% அதிகரிப்புடன் 2014 இல் மீண்டெழும் செலவினமாக ரூபா. 69.915 மில்லியன் தொகையொன்றினை நிறுவனம் செலவிட்டது.

2013 இல் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா. 18.744 மில்லியன் தொகையினையும் மூலதன செலவினத்திற்காக ரூபா. 23.10 மில்லியன் தொகையினையும் திறைசேரி அளித்தது. இது மீண்டெழும் அளிப்பின் மீது 32.26% முன்னேற்றத்தினை அறிக்கையிட்டு 2014 இல் ரூபா. 24.792 மில்லியனாக அதிகரித்தது. மூலதன அளிப்பானது ரூபா. 21.5 மில்லியனாக குறைக்கப்பட்டதுடன் முன்னேற்றம் 7.4% ஆக வீழ்ச்சியடைந்தது.

வருமானம் ஈட்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 22 இருந்து 32 ஆக அதிகரித்ததுடன் கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 236 இருந்து 355 ஆக அதிகரித்தது. எனவே பங்குபற்றுநர் எண்ணிக்கை 26,093 ஆக அதிகரித்தது. இது 2013 இல் 12,921 ஆக இருந்தது.

2014 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் மொத்த தொழில்சார் உறுப்புரிமை 238 ஆக அதிகரித்தது. பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பல்வேறு விடயங்களுடன் தொடர்புடைய 6000 மற்றும் 600 புத்தகங்களை நிறுவனம் முறையே அதுருகிரிய நூலகம் மற்றும் பொகவன்தலாவ பயிற்சி நிலையத்திலுள்ள சிறு நூலகம் ஆகியவற்றில் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் தேறிய சொத்துகள் 2014 இல் 122.32 மில்லியனாக அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 396% அதிகரிப்பினை காண்பிக்கின்றது. நிறுவனம், 2014 இல் சொத்துகளை மீள்விலை மதிப்பீடு செய்துள்ளது. எனவே மீளாய்வு ஆண்டில் ரூபா. 96.675 மில்லியன் தேறிய பெறுகையொன்றினை தோற்றுவித்தது.

நிதி நிலைமை கூற்றுக்கமைய. நடைமுறைச் சொத்து 16.7% இனால் அதிகரித்ததுடன் ஒரு வருடத்தினுள் செலுத்தவேண்டியவையும் 27% இனால் அதிகரித்தது. நிறுவனம் கணக்குகளில் ரூபா. 7.21 மில்லியனுக்கான ஊழிய நல ஏற்பாடுகள் ஒன்றினை வழங்கியது.

## 9.0 நிறுவனம் எதிர்கொண்ட தடைகள்

2004 இல் மீள்கட்டமைப்பு செயன்முறை நிகழ்ந்ததன் பின்னர் முன்னைய ஆண்டுகளில் அனுபவம் பெற்றதனைப் போன்று நிறுவனமானது 2014 ஆம் ஆண்டிலும் பல தடைகளை எதிர்கொண்டது. பயிற்சிப் பீடத்தில் பதவியினர் பற்றாக்குறை மிக முக்கிய தடையொன்றாகவிருந்தது. பயிற்சி பீடத்தில் 6 உறுப்பினர்கள் மாத்திரம் காணப்பட்டனர். அதாவது: பயிற்சி நிபுணர் (முகாமைத்துவம்), பயிற்சி நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்), பயிற்சி நிபுணர் (விவசாயப் பொருளியல்), பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்) மற்றும் பயிற்சி அலுவலர் (விவசாயப் பொருளியல்) அத்துடன் பதவியினர் உதவியாளர் (பயிற்சி) என்பனவாகும். 2014 இல் நிரப்புவதற்கு சாத்தியமற்ற பல வெற்றிடங்கள் காணப்பட்டன.

பல பெருந்தோட்டக் கம்பனிகள் எமது நீண்ட கால கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு தமது நிறைவேற்று அலுவலர்களை விடுவிப்பதற்கு தயக்கம் காட்டின. நிறுவனம் எதிர்கொண்ட மேலும் ஒரு பிரதான தடை இதுவாகும். இந்நிலைமைக்கான காரணம் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவுரை வகுப்புகளுக்காக ஒழுங்கான அடிப்படையொன்றில் விடுவிக்கப்படும் நிறைவேற்று அலுவலர்கள் தோட்டங்களில் உற்பத்தி மற்றும் நிருவாகச் செயற்பாடுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியதாக

இருக்கும். இக்காரணங்களின் விளைவாக நிறுவனமானது கல்விசார் கற்கைநெறிகளை நடாத்தும் விதத்தினை அடிக்கடி மாற்ற வேண்டியிருந்தது. எனவே பயிற்சி அளிக்கும் விதங்களை நிறுவனம் மாற்ற வேண்டியிருந்ததுடன் அனேகமான நிகழ்ச்சித்திட்டங்கள் வார இறுதியில் நடாத்தப்பட்டன. நிறுவனம் எதிர்கொண்ட பிரதான தடையாக இது காணப்பட்டமையினால் தொலைகல்வி கற்கைநெறியாக டிப்ளோமா நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அலுவலக கட்டிடத் தொகுதியானது 60 வருட பழைமை வாய்ந்த 1980 களில் அலுவலகமாக மாற்றப்பட்ட மாட்டுத் தொழுவமாகும். எனவே இது திருத்த கட்டங்களைத் தாண்டி காணப்படுகின்றது. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு புதிய கட்டிட அலுவலகத் தொகுதி நிர்மாணிக்கப்படவேண்டியுள்ளது.

நிறுவனம் தற்போது கொண்டுள்ள 08 வாகனங்களில் 06 பதினைந்து வருடம் பழைமை வாய்ந்தவையாகும். பெஜிரோ ஜீப் வாகனத்தின் வயது 25 வருடங்களுக்கும் அதிகமானதாகும். முன்னர் குறிப்பிட்டது போன்று சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டின் வேறுபட்ட பிராந்தியங்களில் நடாத்தப்படுகின்றன. அத்தகைய தூரங்களுக்கு பயணிப்பதற்கு தற்போது காணப்படுகின்ற வாகனங்கள் நிச்சயமாக பொருத்தமற்றவையாகும். சேவை நாடிகளுக்கு மிகவும் செயல்திறன்மிக்க சேவையினை உறுதிசெய்யும் பொருட்டு இவ்வாகனங்கள் அனைத்தும் புதிய வாகனங்களைக் கொண்டு மாற்றீடு செய்யப்படவேண்டும்.

மேலும் பிராந்தியங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகையில் முறையாக பொதியிட்டு கொண்டு செல்வதற்கு வசதி கிடைக்காவிடின் இருவட்டு ஒளிப்பேழை சேதமடையும். ஆனால் தற்போது காணப்படுகின்ற வாகனங்கள் இருவட்டு ஒளிப்பேழை உபகரணங்களை பாதுகாப்பாக கொண்டுசெல்வதற்கு பொருத்தமற்றதாக காண்பபடுகின்றன. இதனால் நடமாடும் பயிற்சி அலகொன்றாக தயாரிப்பதற்கு பொருத்தமான வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## *10.0 முடிவுரை*

நிறுவனம் பல்வேறு தடைகளையும் தடங்கல்களையும் எதிர்கொண்ட போதிலும் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறைவாக அல்லது அடுத்து காணப்பட்ட காலத்தின் போது உள்ளக பயிற்சிகளை சில பங்குதாரர்களுடன் இணைந்து ஏற்கனவே தாபித்துள்ளது. 2004 இன் இறுதியில் மீள் கட்டமைப்பு செயன்முறை இடம்பெற்றதன் பின்னர் கடந்த காலத்தில் நிறுவனமானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின்போது நிதியியல் ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் இலாபத்தினை ஈட்டியது. இவ்வாண்டில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 249 ஆக இருந்தபோதிலும் 387 நிகழ்ச்சிகளை இவ்வாண்டின்போது நிறுவனம் நடாத்தக்கூடியதாக இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 55.4% இற்கு சமனானதாகும். முன்னைய ஆண்டிற்கு எதிராக 50.4% இனால் தொழிலாளர்கள் மற்றும்

சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை அதிகரித்திருந்தது திருப்தியளிக்கும் விடயமொன்றாகும். சிறுஉடைமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அதிகரித்த கேள்வி காணப்படுகின்றது என்பதை இத்தரவுகள் காண்பிக்கின்றன. சிறு உடைமையாளர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான சாத்தியம் காணப்பட்ட போதிலும் பயிற்சிப் பதவியினர் பற்றாக்குறை காணப்பட்டமையினால் அவ்வாறு செய்வதற்கு நிறுவனத்திற்கு சாத்தியம் கிடைக்கவில்லை.

ஆண்டில் வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கிடையில் ரூபா. 1.030 மில்லியன் மிகையொன்று காணப்பட்டதுடன் நிறுவனத்தின் தேறிய சொத்துகள் 2013 ஆம் ஆண்டில் ரூபா. 24.619 மில்லியனிலிருந்து ரூபா. 122.32 மில்லியனாக அதிகரித்தது.

மேலும், ரூபா. 9.98 மில்லியன் திறைசேரியின் நிதியளிப்பினை பயன்படுத்தி தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை சிறுஉடைமையாளர்களுக்காக 355 நிகழ்ச்சித்திட்டங்களை திறைசேரியின் நிதியளிப்பை பயன்படுத்தி அடுத்த வருடத்திலும் சிறுஉடைமையாளர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அதிக கவனம் செலுத்தப்படும். இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வு ஆண்டின் போது பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் திருப்திப்படக்கூடியதாக உள்ளது என்பதுடன் பதவியனரின் முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு அத்துடன் ஆளுநர் சபையின் முறையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை என்பவற்றின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட இலக்குகளை நிறுவனம் அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் செயற்பாடுகளில் அடைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அத்துடன் முகாமைத்துவம் தனது உண்மையான நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்கின்றது.

தீப்தி அசோக அபேவிக்ரம

தவிசாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம

# நிதியியல் கூற்றுகள்

| **நிதியியல் அறிக்கை** | **பக்கம்** |
|---|---|
| குறிப்புகளும் கணக்கீட்டு கொள்கைகளும் | 42 - 50 |
| நிதியியல் நிலைக்கூற்று | 51 - 52 |
| நிதிச் செயலாற்றுகை கூற்று | 53 |
| பங்கு மூலதன / தேறிய சொத்துகள் மாற்றக் கூற்று | 54 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 55 |
| திட்டமிடப்பட்ட செயலாற்றுகையும் உண்மையான செயலாற்றுகையும் | 56 |
| ஆதனம் பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் | 57 - 58 |
| அருவச் சொத்துகள் | 59 - 60 |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | 61 - 70 |
| நிதியியல் சிறப்பு கூறுகள் | 71 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 72 |

## தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2014 ஆம் ஆண்டிற்கான கணக்கீட்டு கொள்கைகளும், நிதிக் கணக்குகளுக்கான குறிப்புகளும்

### *1) அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு*

நிறுவனத்தின் ஆளுநர் சபையின் ஆலோசனைகமைய கணக்குகள், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அளிப்புகளில் இருந்தும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கல்விசார் கற்கை நெறிகள், ஆலோசனை பணிகளை பொறுப்பேற்றல், தொழில்சார் உறுப்புரிமை சந்தாக்கள், வெளியீடுகள் விற்பனை போன்றவற்றில் இருந்தும் ஈட்டப்பட்ட போதிய நியதியங்கள் கிடைக்கப்பெறுவதுடன் அவசியமாக காணப்படுகின்ற நிறுவனம் அதன் அனைத்து பெறுப்புகளையும் நிறைவு செய்வதற்கு இந் நிதியங்கள் நிறுவனத்தை இயலச் செய்கின்றன.

### 2. *முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்*

நிதியியல் கூற்றுகள் தயாரிக்கையில் பிரயோகிக்கப்பட்ட கோட்பாட்டு கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. வேறு வகையில் குறிப்பிட்டால் அன்றி இக் கொள்கைகள், எடுத்துரைக்கப்படும் அனைத்து ஆண்டுகளில் முரணின்றி பிரயோகிக்கப்படுகின்றன.

### 2.1 *தயாரித்தல் அடிப்படை*

நிதியியல் கூற்றுகள், ஒன்று திரலுதல் கணக்கீட்டின் அடிப்படையில் **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு** இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. பிரயோகிக்கப்பட்ட அளவீட்டு அடிப்படையானது சொத்துகளின் மீள் மதிப்பீட்டுக்காக சீர் செய்யப்பட்ட வரலாற்று கிரயமாகும்.

தொடர்ந்து இயங்கும் அடிப்படை ஒன்றில் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காலம் முழுவதும் கணக்கீட்டு கொள்கைகள் முறணற்று பிரயோகிக்கப்படுகின்றன.

#### 2.1.1 *வேலை, சேவைகள், வழங்கல்கள்*

வேலைகள், சேவைகள், வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

### 2.2 *அருவச் சொத்துகள்*

வேறாக பெற்றுக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துகள் ஒன்று திரண்ட கடன் தீர் செலவு மற்றும் ஒன்று திரண்ட பொறுமதி குறைத்தல் என்பன கழித்து அறிக்கையிடப்படுகின்றன. கடன் தீர்த்தலானது அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலம் மீது நேர் நிரை அடிப்படை ஒன்றில் விதிக்கப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலங்களும் கடன் தீர்த்தல் முறையும் ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் மீளாயப்படுவதுடன் மதிப்பிடலுக்கான ஏதேனும் மாற்றங்களின் விளைவு, எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை ஒன்றில் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

**கணணி மென்பொருள்**

கணக்கீடு, சம்பளம் வழங்கல், பயிற்சி புள்ளி விபரங்கள் மற்றும் வள முகாமைத்துவம் போன்றனவற்றுக்காக உருவாக்கப்பட்டுள்ள கணணி மொன்பொருள், கணணியின் தொழிற்பாட்டு முறைமை ஒன்றின் பாகமாக இவை இல்லாமையினால் அருவச் சொத்துகளாக இனங்காணப்படுகின்றன. நாலு வருடங்களின் பின்னர் இச்சொத்துகள் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படுகின்றன.

***தொலைக் கற்கை பாடக் கூறுகள் தயாரித்தல் செலவு***

பொருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமாவிற்கான தொலை கற்கை நெறிகள் தயாரித்தல் செலவு, அருவச் சொத்தான இனங்காணப்படுவதுடன் தயாரிக்கப்பட்ட பாடக் கூறுகளின் (எழுதப்பட்ட) பயன்பாட்டு ஆயுற்காலம் நான்கு வருடங்கலாகும்.

*அருவச் செத்துகளின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுற்காலம் பின்வருமாறு*

| விபரம் | கணணி மொன்பொருள் | தொலை கற்கை பாடநெறி தயாரித்தல் செலவு |
|---|---|---|
| பயன்பாட்டு ஆயுட்காலம் | 04 வருடங்கள் | 04 வருடங்கள் |

2.3 ***வெளிப் பயிர் செய்கையாளருக்கான கொள்ளளவு அவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்***

வெளிப் பயிர் செய்கையாளருக்கான கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் மூலதன முதலீடு ஒன்றாக கருதப்படுவதுடன் நிறுவனத்தின் அபிவிருத்தி செலவாகவும் கருதப்படுகின்றது. நிறுவனத்தின் நல்லெண்ணத்தினை அதிகரிப்பதற்கு இந் நிகழ்ச்சி திட்டங்கள் நிறுவனத்தினை இயலச் செய்யும் அதேவேளை இந் நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக வெளிப் பயிர் செய்கையாளரினது கொள்ளளவினையும் அறிவினையும் இது விருத்தி செய்கின்றது. நுகர்வோரின் கைகளில் உயர்தரம் வாய்ந்த இறுதி உற்பத்திகளை கிடைக்கச் செய்யும் நோக்குடன் வவசாய நடைமுறைகளின் எதிர்பார்கப்பட்ட மட்டங்களை அடைவதற்கு பயிர் செய்கையாளர் மத்தியில் அறிவினை வழங்குவதற்கான அவசியமான தேவை ஒன்றினையும் இது நிறைவுசெய்கின்றது. ஏற்றுமதி சந்தையில் ஏற்றுமதியாளர்கள் நன்மை அடைவதற்கு மிக முக்கிய விடயம் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது.

இத்தகைய நிகழ்ச்சி திட்டங்களின் தாக்கம் ஒரு ஆண்டினுள் இனங்காணப்படும் என ஊகிக்கப்படுகின்றது. இத்தகைய நிகழ்ச்சி திட்டங்களுக்கான முதலீட்டு பெறுமதி அவ் வருடத்தின் உள்ளேயே பதிவழிப்புச் செய்யப்படும்.

பெருந்தோட்ட வெளிப்பயிர் செய்கையாளரினதும் கீழ் மட்ட தொழிலாளர்களினதும் அறிவினை அதிகரிப்பதற்கு 2014 இல் தேசிய வரவு செலவு திட்டத்தினால் நிதியளிக்கப்பட்ட ரூபா 9.98 மில்லியன் தொகையினை நிறுவனம் செலவிட்டது.

**2.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வினை கழித்து வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வரலாற்றுக் கிரயமானது சொத்தொன்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கும் குறிப்பிடத்தக்க புதுப்பித்தலுக்கும் அதனை பணியாற்றும்

நிலைமைக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க அனைத்து செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

### 2.4.1 பெறுமானத் தேய்வு

கணக்கீட்டு நோக்கத்திற்காக சொத்தொன்றின் பயன்பாட்டு ஆய்வுக் காலத்தின் மிஞ்சிய பெறுமதியொன்றிற்கான காலத்தின் மீது அதனை பதிவழிப்புச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு நேர் நிறை முறையினைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகின்றது.

பொதுவாக பயன்படுத்தப்படும் பெறுமானத் தேய்வு விகிதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நிரந்தரக் கட்டிடங்கள் | 5% |
| அலுவலக தளபாடம் | 10% |
| அலுவலக உபகரணம் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 20% |
| வீதி, நீர்வழங்கல், மின்சாரம், தொலைபேசி (உட்கட்டமைப்பு சொத்துகள்) | 10% |
| நூலகப் புத்தகங்கள் | 10% |
| நானாவித உபகரணங்கள் | 25% |
| காணி மேம்படுத்தல்கள் | 10% |

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக பின்வரும் சொத்துகள் உட்கட்டமைப்பு சொத்துகளாக கருதப்படுகின்றன.

- செலவு, வீதி மேம்படுத்தல்
- நீரும் சக்தி வழங்கலும்
- மின்சார வழங்கல்
- நிறுவனமானது மென்பொருள் பொதியின் பெறுமதியினை உட்கட்டமைப்பு சொத்திலிருந்து அருவச் சொத்து கணக்கிற்கு மாற்றியுள்ளது. சொத்தின் செலவு ரூபா. 160,000 ஆகவிருந்ததனால் இப்பொருளின் பெறுமானத் தேய்வு வீதம் 2014 ஆம் ஆண்டில் 10% இருந்து 25% ஆக மாற்றமடைந்துள்ளது. இக்கொடுக்கல் வாங்கலில் பெறுமதி குறைப்பு தொகை ரூபா. 24,000 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அருவச் சொத்துக்களுக்கான குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.
- **அளவீட்டு அடிப்படை**
  வாகனங்கள் மற்றும் காணி தவிர அனைத்து நிலையான சொத்துகளும் கிரய முறைமைக்கு அமைவாக பெறுமானத் தேய்வு செய்யப்படுவதுடன் மீள் பெறுமதி முறைக்கு அமைய வாகனங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தின் காணிகளுக்கு பெறுமானத் தேய்வு விதிக்கப்படுவதில்லை.

**2.4.2 விற்று அகற்றுதல்**

விற்று அகற்றுதல் மீதான இலாபம் அல்லது நட்டம், விற்று வரவுகள் மற்றும் கொண்டுள்ள தொகையுடன் ஒப்பிடுவதுடன் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்றன. இவை வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

**2.4.3 மீள் பெறுமதி மதிப்பீடு**

**அ. மோட்டார் வாகனங்கள்**

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 2 வாகனங்கள் தவிர நிறுவனத்தின் வாகனங்கள் தொழில்சார் வாகனப் பொறியியலாளர் ஒருவரினால் 2012 ஓகஸ்ட் 23 அன்று மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. மீள் விலை மதிப்பீடு மீதான இலாபம் மீள் மதிப்பீட்டு ஒதுக்குக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாகனங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபா. 7,833,012.66 ஆகவிருந்தது. எனவே வாகனங்கள் மீதான மொத்த மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கு ரூபா. 10,548,233.03 வரை அதிகரிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| விலை மதிப்பீட்டாளரின் பெயர் | திரு. டி.பி. த சில்வா | |
| தகைமை | தொழில்சார் வாகன பொறியியலாளர் | |
| விலை மதிப்பு திகதி | 2012 ஓகஸ்ட் 23 | |
| மீள் விலை மதிப்பீட்டு தொகை | 32-4086 ஜீப் | ரூபா 1,450.000/- |
| | 61-2361 பஸ் | ரூபா 950,000/- |
| | 250-3161 கெப் | ரூபா 1,700,000/- |
| | 58-3717 கெப் | ரூபா 1,700,000/ |
| | 250-2603 கெப் | ரூபா 1,550,000/- |
| | 250-2604 வேன் | ரூபா 1,950,000/- |

**ஆ. தளபாடம், அலுவலக உபகரணம், பொறித்தொகுதியும் இயந்திரங்களும் மற்றும் நானாவித உபகரணங்கள்**

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின்போது 2014.01.01 அன்று உள்ளவாறு அதுருகிரிய அலுவலகத்தில் காணப்பட்ட மேற்குறித்த சொத்துகள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மீள் விலைமதிப்பிடப்பட்டுள்ளன.

மீள் விலைமதிப்பிடல் சீராக்கல் உள்ளடங்கலாக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விபரங்கள் நிதியியல் கூற்றுகளில் 54 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. மீள் விலை மதிப்பிடல் மீதான தேறிய இலாபம் மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்குக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொகுதியின் ஆதனங்கள் விலை மதிப்பீடு தேவையான தகவல்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விலை மதிப்பீட்டாளரின் பெயர் | திரு. கே.ஏ.டி.என்.ஜே. நாணயக்கார |
| தகைமை | பிராந்திய விலை மதிப்பீட்டாளர் |
| விலை மதிப்பீடு செய்யப்படும் திகதி | 2004.01.01 |
| அமைவிடம் | அதுருகிரிய |

| சொத்துகளின் வகை | 2014.01.01 அன்று உள்ளவாறு கொண்டுள்ள பெறுமதி (ரூபா. 000) | மீள் விலை மதிப்பீட்டுத் தொகை (ரூபா. 000) | மீள் விலை மதிப்பீட்டு மிகை/ (பற்றாக்குறை) (ரூபா. 000) |
|---|---|---|---|
| அலுவலக உபகரணம் | 17,611 | 3,438 | (2,635) |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 5,129 | 5,669 | 3,604 |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 1,004 | 335 | 32 |
| நானாவித உபகரணங்கள் | 2,893 | 859 | (228) |

**இ. கட்டடங்கள்**

பொகவன்தலாவ பிராந்திய நிலையத்திலுள்ள கட்டிடம் மற்றும் இலங்கை இராணுவத்தின் ஏழாவது பொறியியல் படையணிக்கு உரிமைத்துவம் மாற்றப்பட வேண்டியுள்ள மூன்று பதவியினர் விடுதிகள் நீங்கலாக அனைத்து கட்டிடங்களும் 2014.01.01 அன்று உள்ளவாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மீள் விலை மதிப்பிடப்பட்டுள்ளது.

விலை மதிப்பீட்டாளரின் பெயர்- தகைமை　　திரு. கே.ஏ.டி.என்.ஜே. நாணயக்கார
பிராந்திய விலை மதிப்பீட்டாளர்
விலை மதிப்பீடு செய்யப்படும் திகதி　　2004.01.01

| சொத்துகளின் வகை | 2014.01.01 அன்று உள்ளவாறு கொண்டுள்ள பெறுமதி (ரூபா. 000) | மீள் விலை மதிப்பீட்டுத் தொகை (ரூபா. 000) | மீள் விலை மதிப்பீட்டு மிகை/ (பற்றாக்குறை) (ரூபா. 000) |
|---|---|---|---|
| கட்டிடங்கள் | 74,424 | 134,074 | 95,902 |

மீள் விலை மதிப்பீட்டு மிகை ரூபா. 96,675,557.18 இனால் அதிகரித்துள்ளது. எனவே, நிறுவனத்தின் தேறிய சொத்து ரூபா. 123,085,110.31 இனால் அதிகரித்துள்ளது.

**ஈ. மீள் விலை மதிப்பிடப்படாத சொத்துகள்**

2014 ஆம் ஆண்டில் பின்வரும் சொத்துகள் மீள் விலை மதிப்பிடப்படவில்லை.

| | 2014.01.01 அன்று உள்ளவாறு கொண்டுள்ள பெறுமதி (ரூபா. 000) | 2014.12.31 அன்று உள்ளவாறு தேறிய கொண்டு செல்லும் பெறுமதி |
|---|---|---|
| காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | *1,727* | *1,727* |
| கட்டிடங்கள் (பொகவன்தலாவ மற்றும் அதுருகிரியவில் அமைந்துள்ள 3 பதவியினர் விடுதிகள்) | *14,855* | *4,969* |
| உபகரணங்கள் (பொகவன்தலாவ) | | |
| தளபாடங்கள் (பொகவன்தலாவ) | | |
| உட்கட்டமைப்பு சொத்து | *937* | *262* |
| புத்தகங்கள் | *512* | *45* |
| காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | *14,855* | *12,272* |
| கட்டிடங்கள் (பொகவன்தலாவ மற்றும் அதுருகிரியவில் அமைந்துள்ள 3 பதவியினர் விடுதிகள்) | *2247* | *588* |
| நானாவித உபகரணங்கள் (மாணவ விடுதிப் பொருட்கள்) | *919* | *97.* |
| **மொத்தம்** | ***31,037*** | ***19,960*** |

### 2.4.4 வருடாந்த அளவீட்டு சபை

ஒவ்வொரு வருட இறுதியிலும் நிறுவனம் வருடாந்த அளவீட்டு சபையினை நடாத்துவதுடன் பொருளாதார ரீதியாக குறைவாக பயனுள்ள பொருட்களை விற்று அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

### 2.4.5 இலங்கை இராணுவத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியின் தற்போதைய நிலை

1.9499 ஹெக்டயர் பரப்புள்ள காணியும் 3 பதவியினர் விடுதிகளும் இலங்கை இராணுவத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. மேற்குறித்த ஆதனங்களின் உரிமைத்துவமானது, காணி பெற்றுக் கொள்ளல் வழக்கின் 30(அ) பிரிவின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறித்த பெற்றுக்கொள்ளலின் 5ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படவுள்ளது. ரூபா. 55 மில்லியன் நட்டஈடளித்தல், நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்படவேண்டியுள்ளது.

**3.0 உட்கட்டமைப்பு வசதிகளை விற்று அகற்றுதல்**

இது சேவை வழங்கும் நிறுவனங்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு வைப்புகளை உள்ளடக்குகின்றது.

**4.0 பதிவேட்டுப் பொருட்கள்**

நிறுவனத்தின் வெளியீடுகள், அச்சுப் பொருட்கள், நியதிச் சட்ட மற்றும் அலுவலக கோரிக்கைகள், டயர், ஏனைய நுகரத்தக்கவை என்பவற்றை பதிவேட்டுப் பொருட்கள் உள்ளடக்குகின்றன. முதல் வந்தது முதலில் வெளிச்செல்லல் என்ற கோட்பாட்டின் கீழ் பொருட் கிரயத்தில் இவை மீள் விலை மதிப்பிடப்படுகின்றன.

**5.0 காசும் காசுக்கு சமமானவையும்**

கையிலுள்ள காசு, அதுருகிரிய இலங்கை வங்கிக் கிளையில் நடைமுறை கணக்கு வங்கி நிலுவை என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**6.0 குறுகிய கால முதலீடுகள்**

நிறுவனமானது, ஈட்டப்பட்ட மிகை வருமானத்தினை குறுகிய கால கால வைப்புகளில் முதலீடு செய்துள்ளது. நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும் எதிர்கால நிதிக் கடமைப் பொறுப்புகளுக்காகவும் பயன்படுத்தும் பொருட்டு அதுருகிரிய இலங்கை வங்கிக் கிளையில் நிலையான வைப்பு மற்றும் உறுப்புரிமை சேமிப்பு கணக்கு ஆகியவற்றிலும் முதலிடுகின்றது.

**7.0 ஒதுக்குகள்**

**7.1 மீள விலை மதிப்பீட்டு ஒதுக்கு**

ஒதுக்குகளானது 2012 இல் நிறுவனத்தின் வாகனங்களின் மீள் விலை மதிப்பீட்டு மிகைகளை உள்ளடக்குகின்றது. கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பன 2.4.3 ஆம் பந்தியில் (ஈ) இவ்வறிக்கையின் குறிப்பு 42 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட சொத்துகளை ஏற்ற மீள் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2014 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கின் தேறிய இலாபம் ரூபா. 107,259,790 ஆக கணக்கிடப்பட்டது. ஒதுக்குகளின் அசைவுகள் பங்குமூலதன மாற்றக்கூற்றில் தரப்பட்டுள்ளன.

**8.0 ஊழியர் ஓய்வூதிய நலன்**

ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறும்போது ஓய்வுநல செலவுகளை நிறைவேற்றுவதற்காக நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்காகவும் கணக்குகளில் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுகளுக்கான நிலுவையாக ஏற்படுகின்ற நிலை நடைமுறைப் பொறுப்புகளில் உள்ளடக்கப்படுகின்றது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுவனம் பணிக்கொடை ஏற்பாட்டின் சமமான தொகையொன்றிற்காக நிரந்தர வைப்பில் முதலீடு செய்துள்ளது.

## 9.0 பிற்போடப்பட்ட வருமானம்

### 9.1 அன்பளிப்புச் செய்யப்பட்ட வெளியீடுகள் கையிருப்புகள்

தேயிலை அபிவிருத்திக் கருத்திட்டத்திலிருந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட வெளியீட்டுக் கையிருப்பின் பெறுமதி பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இது தேறுகின்றபோது வருமானம் கணக்கிடப்படும்.

### 9.2 மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க அளிப்பு

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் மூலதன அபிவிருத்தி செலவினத்திற்கான கணிசமான தொகையொன்று அளிக்கப்பட்டதுடன் இத்தொகை சொத்துகளில் பயன்பாடுமிக்க ஆயுட் காலத்திற்காக முறைமைசார் மற்றும் உத்தேச அடிப்படையொன்றில் வருமானமொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்ற பிற்போடப்பட்ட வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துகளின் பயன்பாடுமிக்க ஆயட்காலம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நிரந்தரக் கட்டிடங்கள் | 20 வருடங்கள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 5 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 5 வருடங்கள் |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 5 வருடங்கள் |
| வீதி, நீர்வழங்கல், மின்சாரம், தொலைபேசி (உட்கட்டமைப்பு சொத்துகள்) | 10 வருடங்கள் |
| நூலகப் புத்தகங்கள் | 10 வருடங்கள் |
| நானாவித உபகரணங்கள் | 4 வருடங்கள் |
| காணி மேம்படுத்தல்கள் | 10 வருடங்கள் |

## 10.0 குறுகிய கால ஏற்பாடுகளும் அவசர கால பொறுப்புகளும்

### 10.1 அவசரகால பொறுப்பு

நிறுவனத்தின் ஓடியோ விசுவல் அலுவலராக பணியாற்றிய திரு. ஏ.கே.சி. அத்தனாகொடை என்பவர் ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் அவரது தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கு எதிராக நிறுவனத்திற்கு எதிராக வழக்கொன்றினை தொடுத்துள்ளார். ஆண்டின் இறுதி வரை அவரது சம்பளம் மற்றும் ஏனைய ஊதிய கொடுப்பனவுகளை நிறைவு செய்வதற்கு ரூபா. 608,901 கொண்ட அவசரகால பொறுப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது தொழில் நியாய சபை இவ்வழக்கினை கேட்கின்றது. 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா. 3,084,934.60 பொறுப்பிற்கான ஏற்பாட்டுடன் இவ்வருடத்திற்கான கணக்குகளை நாம் நிறைவு செய்துள்ளோம்.

**10.2 சந்தேக கடன் படுநர்களுக்கான ஏற்பாடுகள்**

கணக்கு நிலுவை ஆண்டின் முடிவில் நிறுவனம் வராக்கடனுக்காக 2% ஏற்பாடொன்றினை மேற்கொண்டுள்ளது.

**11.0 பயிற்சி வருமானம்**

**11.1 குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள்**

பாடநெறிக் காலம் 6 மாதங்களை விட குறைவாக இருக்குமெனில் குறுகிய காலப் பாடநெறியாக இது கருதப்படும். குறுகிய கால பாடநெறிகளின் மொத்த வருமானமும் கணக்கீட்டு காலப் பகுதியின் போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் நிதிச் செயலாற்றுகை கூற்றிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**11.2 நீண்ட காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (முன்னெடுக்கப்படும் பயிற்சி நிகழ்ச்சிகள்)**

பாடநெறிக் காலம் 6 மாதங்களுக்கு மேற்பட்டிருப்பின் இது நீண்ட கால நிகழ்ச்சித்திட்டமாக கருதப்படுகின்றது. (முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சி) இப்பாடநெறிகளின் வருமானம், அத்தகைய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கும் மாதம் மற்றும் நிகழ்ச்சிகளின் காலம் என்பவற்றை கருத்திற் கொண்டு நிதியியல் செயலாற்றுகை கூற்றிற்கு விகிதாசார அடிப்படையில் பிரயோகிக்கப்படும்.

**12.0 பொகவன்தலாவை பிராந்திய நிலையம்**

பொகவன்தலாவை பிராந்திய நிலையத்துடன் தொடர்புடைய வருமானம் மற்றும் செலவு என்பன நிதியியல் செயலாற்றுகை கூற்றில் வேறாக அறிக்கையிடப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டில் ரூபா. 4,060,763 தேறிய மிகை ஒன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

**நிதி நிலைக்கூற்று**

**டிசம்பர் 31 இல் உள்ளவாறு**

| | குறிப்பு | 31/12/2014 | 31/12/2013 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | ரூபா | ரூபா |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 1 | *2,191* | *326* |
| வருமதிகள் | 2 | *4,354* | *6,606* |
| பதிவேட்டுப் பொருட்கள் | 3 | *935* | *842* |
| முற்கொடுப்பனவுகள் | 4 | *529* | *548* |
| ஏனைய நடைமுறைச் சொத்துகள் | 5 | *22,937* | *18,185* |
| | | ***30,946*** | ***26,507*** |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| வருமதிகள் | 6 | *921* | *919* |
| ஆதனம் பொறித்தொகுதி, உபகரணம் | 7 | *181,165* | *84,368* |
| அருவச் சொத்துகள் | 8 | *1,021* | *406* |
| ஏனைய நடைமுறையற்ற சொத்துகள் | 9 | *612* | *612* |
| | | ***183,719*** | ***86,305*** |
| | | | |
| **மொத்த சொத்துகள்** | | ***214,665*** | ***112,812*** |
| | | | |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| செலுத்த வேண்டியவை | 10 | *14,612* | *12,509* |
| குறுகிய கால ஏற்பாடுகள் | 11 | *3,085* | *2,477* |
| ஊழியர் நலன்கள் | 12 | *1,663* | *254* |
| | | ***19,360*** | ***15,240*** |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| நீண்ட கால ஏற்பாடுகள் | 13 | *67,433* | *66,770* |
| ஊழியர் நலன்கள் | 14 | *5,547* | *6,183* |
| | | ***72,980*** | ***72,953*** |
| **மொத்த பொறுப்புகள்** | | ***92,340*** | ***88,193*** |
| | | | |
| **தேறிய சொத்துகள்** | | ***122,325*** | ***24,619*** |
| | | | |
| **தேறிய சொத்துகள்/பங்குமூலதனம்** | | | |
| அரசாங்கம் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் பங்களிக்கப்பட்ட மூலதனம் | 15 | *38,386* | *38,386* |
| ஒதுக்குகள் | 16 | *107,260* | *10,584* |
| திரண்ட மிகை/(பற்றாக்குறை) | 17 | *(23,321)* | *(24,351)* |
| **மொத்த தேறிய சொத்துகள்/பங்குமூலதனம்** | | ***122,325*** | ***24,619*** |

பக்கம் 40 தொடக்கம் 47 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் பக்கம் 50 தொடக்கம் 66 வரை காணப்படும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுகளை முழுமையாக்கும் பாகங்களாகும்.

பொதுத்துறை கணக்கீட்டு தர நியமங்களின் தேவைப்படுத்தல்களுக்கு அமைய நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என சான்றுபடுத்துகின்றேன்.

எல் டி ஜெ பிரியந்த
கணக்காளர்

இந்நிதிக் கூற்றுகளை தயாரித்தலுக்கும் எடுத்துரைத்தலுக்குமான பொறுப்புடைமை பணிப்பாளர் சபையினைச் சார்ந்ததாகும். இந்நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டது.

கலாநிதி நிஸ்ஸங்க இத்தகொட
பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

ஏ. ஏ. எம். அமரசிங்க
தவிசாளர்

கொழும்பு
15/07/2015

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்
## நிதிச்செயலாற்றுகை கூற்று (ரூபா 000')

| வருவாய் | குறிப்பு | 2014.12.31 (ரூபா'000') | 2013.12.31 (ரூபா'000') |
|---|---|---|---|
| அரசாங்க மீண்டெழும் அளிப்புகள் | 18 | 24,792 | 18,744 |
| அரசாங்க மீண்டெலும் அளிப்புகள் | 19 | 20,837 | 16,751 |
| பயிற்சி வருமானம் | 20 | 10,037 | 11,573 |
| வதிவிட வசதிகளை வாடகைக்கு விடல் | 21 | 6,219 | 6,570 |
| பொகவந்தலாவ பிராந்திய நிறுவனத்திலிருந்து வருமானம் | 22 | 7,824 | 8,247 |
| வட்டி வருமானம் | 23 | 1,038 | 526 |
| ஏனைய வருமானம் | 24 | 199 | 311 |
| மொத்த வருவாய் | | 70,946 | 62,722 |
| | | | |
| செலவுகள் | | | |
| வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் | 25 | 19,452 | 17,304 |
| வழங்கல்கள், பயன்படுத்தப்பட்ட நுகரத்தக்கவை | 26 | 2,910 | 3,510 |
| திருத்தல்களும் பராமரிப்பும் | 27 | 3,670 | 2,716 |
| தொடர்பாடலும் பயன்பாட்டு சேவைகளும் | 28 | 7,117 | 5,994 |
| கொள்ளவு விருத்தி நிகழ்ச்சி திட்டம் உட்பட பயிற்சி செயலவுகள் | 29 | 14,375 | 11,755 |
| வசதிகளை வாடகைக்கு விடுதல் தொடர்புபட்ட செலவுகள் | 30 | 1,923 | 2,159 |
| பொகவந்தலாவ பிராந்திய நிலையத்திற்கான செலவுகள் | 31 | 3,763 | 2,937 |
| பொறுமானத் தேய்வு கடன் தீர் செலவுகள் | 32 | 15,833 | 10,495 |
| ஏனைய செலவுகள் | 33 | 873 | 1,372 |
| **மொத்த செலவுகள்** | | 69,916 | 58,242 |
| காலத்திற்கான மிகை / (பற்றாக்குறை) சாட்டத்தக்கது | | 1,030 | 4,480 |
| கட்டுப்படுத்தல் நிறுவன உரிமையாளர்கள் | | 1,030 | 4,480 |

தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

தேறிய சொத்துகள் / பங்கு மூலதன மாற்றக் கூற்று

31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| பங்கு மூலதன்தில் மாற்றக்கூற்று | | | | | மொத்த தேறிய சொத்துகள்/ பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|
| விபரம் | பங்களிக்கப்பட்ட மூலதனம்<br>பங்களிக்கப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | திரட்டிய மிகை / பற்றாக்குறை | மொத்தம் | |
| 2013.01.01 அன்றுள்ளவாறு மீதி | 38,386 | 10,584 | (28,834) | 20,136 | **20,136** |
| 2013 இற்கான மிகை (பற்றாக்குறை) | | | 4,483 | 4,483 | 4,483 |
| | | | | | |
| 2013.12.31 அன்று உள்ளவாறு மீதி | 38,386 | 10,584 | (24,351) | 24,619 | **24,619** |
| | | | | | - |
| மீள்மதிப்பீட்டு மிகை | - | 96,676 | - | 96,676 | 96,676 |
| 2014 இற்கான மிகை | - | - | 1,030 | 1,030 | 1,030 |
| 2014.12.31 அன்று உள்ளவாறு மீதி | **38,386** | **107,260** | **(23,321)** | **122,325** | **122,325** |

| தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்<br>காசு பாய்ச்சல் கூற்று | | |
|---|---|---|
| முடிவுற்ற ஆண்டிற்கானது | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | **31/12/2014** | **31/12/2013** |
| | **&gh '000'** | **LKR '000'** |
| **ஆண்டுக்கான மிகை (பற்றாக்குறை)** | 1,030 | 4,482 |
| கழிக்குக – வட்டி வருமானம் | 1,038 | 526 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து தெறிய காசு உப்பாய்ச்சல்/வெளிபாய்ச்சல் | (8) | 3,956 |
| **காசு அல்லாதவற்றின் அசைவுகள்** | | |
| பொறுமானத் தேய்வு (குறிப்பு -02) | 15,552 | 10,312 |
| கடன் தீர்த்தல் | 277 | 183 |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | 773 | (4) |
| நிரந்தர சொத்துக்கள் விற்பனை மீது இலாம் / (நட்டம்) | - | 161 |
| பிற்போடப்பட்ட வருமானம் | (20,837) | (16,751) |
| ஐயகடன் படுநர் ஏற்பாட்டு அதிகரிப்பு | | |
| வர்த்தனம் மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/குறைவு | 67 | - |
| பொருட் பதிவேட்டில் (அதிகரிப்பு)/குறைவு | 1,729 | (1,493) |
| முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைவு | (93) | 41 |
| ஏனைய நடைமுறை சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு | 19 | (101) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய சொலுத்தப்படவேண்டியவைகளில் (அதிகரிப்பு)/குறைவு | (167) | (11) |
| | 2,103 | 5,882 |
| குறிகிய கால ஏற்பாடுகளில் (அதிகரிப்பு)/குறைவு | 608 | 575 |
| **தெழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | 23 | 2,750 |
| **முதலிட்டு செயற்பாடுகள்** | | |
| ஆதணம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பெறுதல் | (16,067) | (16,759) |
| உட்கட்டமைப்பு சொத்துகளுக்கான கொடுப்பனவு-மின்சாரம் | | (220) |
| அருவச் சொத்துகளை பெற்றுக்கொள்ளல் | (500) | |
| நிலையான.்.அழைப்பு வைப்புகளில் முதலீடு | (6,272) | (13,437) |
| நிலையான.்.அழைப்பு வைப்புகளில் அதிகரிப்பு | 2,000 | 3,250 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் கொடுப்பனவு | (1,166) | (1,549) |
| கடன்கள் மற்றும் முற்பணங்களில் இருந்து காசு அறவீடு | 1,620 | 2,037 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 727 | 130 |
| நிலையான சொத்துகள் விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காசு | | 138 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய காசு வெளிப்பாய்ச்சல்** | **(19,658)** | **(26,410)** |
| **நிதி இடல் செயற்பாடுகள்** | | |
| மூலதக செலவீனத்திற்கான அரசாங்க அழிப்பு | 21,500 | 23,100 |
| **நிதி இடல் செயற்பாடுகளில் தேறிய காசு உட்பாய்ச்சல்** | **21,500** | **23,100** |
| | | |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய (குறைவு.்.அதிகரிப்பு)** | 1,865 | (560) |
| **ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கும் சமமானவையும்** | 326 | 886 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவையும் மீதி** | 2,191 | 326 |

## தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான செயலாற்றுகை

2014 டிசம்பர் 31 ல் முடிவுற்ற ஆண்டிற்கானது (ரூபாய் 000')

| வருவாய் | | உண்மையானது | திட்டமிடப்பட்டது | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| அரசாங்க அளிப்புகள் | 18 | 24,792 | 30,500 | 81% |
| பிற்போடப்பட்ட அரசாங்க மூலதன அளிப்பிலிருந்து வருமானம் | 19 | 10,937 | 12,330 | 89% |
| கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சிகள் | 19 | 9,900 | 10,000 | 99% |
| பயிற்சி வருமானத் | 20 | 10,037 | 17,072 | 59% |
| வதிவிட வசதிகளை வாடகைக்கு விடல் | 21 | 6,219 | 7,200 | 86% |
| பொகவந்தலாவை பிராந்திய நிலையத்திலிருந்து வருமானம் | 22 | 7,824 | 7,500 | 104% |
| வட்டி வருமானம் | 23 | 1,038 | 1,578 | 65% |
| ஏனைய வருமானம் | 24 | 199 | 300 | 66% |
| **மொத்த வருவாய்** | | 70.946 | 86,480 | 82% |
| | | | | |
| **மீண்டெலும் செலவுகள்** | | | | |
| வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நலன்கள் | 25 | 19,453 | 24,388 | 80% |
| வளங்களும் பயன்படுத்தப்பட்ட நுகரத்தக்கவையும் | 26 | 2,910 | 5,090 | 57% |
| திருத்தங்களும் பராமரித்தலும் | 27 | 3,670 | 3,075 | 119% |
| தொடர்பாடலும் பராமரிப்பு சேவைகள் | 28 | 7,116 | 11,440 | 62% |
| பயிற்சி செலவுகள் | 29 | 14,375 | 18,500 | 78% |
| வசதிகளை வாடகைக்கு விடுவதுடன் தொடர்புடைய செலவுகள் | 30 | 1,923 | 3,276 | 59% |
| பொகவந்தலாவ பிராந்திய நிலையத்திற்கான செலவுகள் | 31 | 3,763 | 2,966 | 127% |
| பெறுமானத் தேய்வுகம் கடன் தீர் செலவுகளும் | 32 | 15,833 | 12,330 | 128% |
| ஏனைய செலவுகள் | 33 | 873 | 1,815 | 48% |
| **மொத்த செலவுகள்** | | 69,916 | 82,880 | 84% |
| | | | | |
| **மூலதன செலவீனம்** | | | | |
| நிலையான சொத்துகள் | | 16,067 | 18,200 | 88% |
| அருவச் சொத்துகள் | | 500 | 2,000 | 25% |
| கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சிகள் | | 9,900 | 10,000 | 99% |
| மொத்த மூலதன செலவீனம் | | 26,467 | 30,200 | 88% |
| | | | | |
| மொத்த செலவீனம் | | 96,383 | 113,080 | 85% |
| திரைசேறி அழிப்புகள் | | | | |
| மீண்டெலும் செலவீனம் | | 24,792 | 30,500 | 81% |
| மூலதன செலவீனம் | | 21,500 | 25,000 | 86% |
| மொத்த அளிப்பு | | 46,292 | 55,500 | 83% |

## ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரண பட்டியல்

| விபரம் | மேற்படுத்தல் உட்பட காணி | கட்டடங்கள் | பொறித்தொகுதியு இயந்திரங்களும் | உபகரணம் | தளபாடம் | மோட்டார் வாகனங்கள் | உட்கட்டமைப்பு சொத்துகள் | நூலக புத்தகங்கள் | நானாவித உபகரணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Cost | | | | | | | | | | |
| **2013.01.01 இல் உள்ளவாறு** | **3,400** | **80,164** | **1,004** | **19,716** | **5,599** | **24,850** | **974** | **2,129** | **3,497** | **141,333** |
| சேர்த்தல்கள் | | 4,099 | - | 1,172 | 137 | 739 | 10,257 | 39 | 316 | 16,759 |
| அகற்றல்கள் | - | - | - | (2,339) | (95) | - | - | | - | (2,434) |
| சீராக்கல் | - | - | - | | - | | - | - | - | - |
| **2013.12.31 இல் உள்ளவாறு** | 3,400 | 84,263 | 1,004 | 18,549 | 5,641 | 25,589 | 11,231 | 2,168 | 3,813 | 155,658 |
| சேர்த்தல்கள் | 104 | 6,179 | 1,818 | 2,663 | 1,880 | 455 | 2,246 | 79 | 643 | 16,067 |
| மாற்றல்கள் | (1,777) | | - | - | | - | 1,377 | - | - | (400) |
| மீள்மதிப்பீடுகள் | | 134,074 | 335 | 3,438 | 5,669 | | | | 859 | 144,375 |
| மீள்மதிப்பீட்டு சீராக்கம் | | (74,424) | (1,004) | (17,612) | (5,129) | - | | - | (2,893) | (101,062) |
| **2014.12.31 இல் உள்ளவாறு** | **1,727** | **150,092** | **2,153** | **7,038** | **8,061** | **26,044** | **14,854** | **2,247** | **2,422** | **214,638** |

| விபரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01/01/2013 இல் உள்ளவாறு ஒன்று திரட்டியது** | **382** | **38,660** | **601** | **12,348** | **3,366** | **3,772** | **767** | **1,518** | **1,700** | **63,114** |
| பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 154 | 2,201 | 101 | 1,846 | 248 | 5,026 | 31 | 68 | 637 | 10,312 |
| அகற்றல்கள் | - | - | - | (2,047) | (86) | | - | | - | (2,133) |
| பெறுமானத் தேய்வு சீராக்கல் | - | | - | - | - | | - | - | - | - |
